Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை - 30 ரூபா | செய்தி: 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 | கதிர் : 206 | ஆனி 08ஆம் நாள் திங்கட்கிழமை | 22 ஜூன் 2020 | வள்ளுவர் ஆண்டு 2051

## தாயும் பிள்ளைகளும் தற்கொலைக்கு முயற்சி

மருத்துவமனையில் சேர்ப்பு

கொடிகாமம், ஜூன் 22

யாழ்ப்பாணம் நெடுங்குளம் பகுதியில் தாய் மற்றும் இரு பிள்ளைகள் தவறான முடிவு எடுத்து நஞ்சருந்திய நிலையில் 16



முகமாலைச் சூட்டுச் சம்பவம்:

## முழுமையான அறிக்கை கோருகிறார் ஆளுநர்

யாழ்ப்பாணம், ஜூன் 22

முகமாலை காரைக்காடு குளப்பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைகளை 15

## தாக்குவதற்கு முயற்சி அதனாலேயே சூடு!

சிப்பாய் வாக்குமூலம் உடல் நேற்றுக் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22

முகமாலையில் நேற்றுமுன்தினம் மாலை இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த இளைஞனின் சடலம் நேற்று மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இளைஞனின் உடலில் இரண்டு இடங்களில் 15

## வாக்களிப்பு நேரம் நீடிக்கப்படுமா?

முடிவு 25இல் தெரியும் என்கிறார் மஹிந்த

கொழும்பு, ஜூன் 22

நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பு நேரத்தை நீடிப்பதா அல்லது இல்லையா என்பது தொடர்பில் எதிர்வரும் 25ஆம் திகதியே இறுதி முடிவெடுக்கப்படும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார். 15

# வீட்டினை உருவாக்கிய புலிகள் அதனை ஆதரிப்பது அதிசயமல்ல!

## கூட்டமைப்புடன் முன்னாள் போராளிகள் இணைவை இப்படிச் சொல்கிறார் ஞானசாரர்



கொழும்பு, ஜூன் 22

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற வீட்டைப் புலிகளே கட்டினார்கள். அந்த வீட்டுக்கு புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் ஆதரவு வழங்குவதில் ஆச்சரியம் இல்லை. இப்படிக் கூறியுள்ளார் பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர். 15



## தொடர்ந்து தாக்கப்படும் இந்துக்களின் வழிபாட்டிடம்

மன்னார், ஜூன் 22

யாழ்.- மன்னார் பிரதான வீதி, தள்ளாடி விமான ஓடுபாதை அருகில் காணப்பட்ட இந்துக்களின் சிறிய ஆலயம் ஒன்று, நேற்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலை இனம் தெரியாத நபர்களால் உடைத்துச் சேதமாக்கப் பட்டுள்ளது.

அங்கிருந்த இந்துக் கடவுள்களின் படங்கள் ஆலயத்தின் வாசல் பகுதியில் உடைத்து அழிக்கப்பட்டுள்ளன. சில படங்கள் அருகில் உள்ள பற்றைக் காடுகளுக்குள் 15

## சர்வாதிகார ராணுவ ஆட்சியை நோக்கி கோத்தா அரசு நகர்வு

ரணில் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 22

ஜனநாயக ஆட்சி, சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் ஆகிய இரண்டையுமே முற்றாக ஒழித்துக்கட்டி சர்வாதிகார நிலைகொண்ட 15

## கோத்தாவின் பாதையே சரி!

லங்காராம விகாராதிபதி நற்சான்று

கொழும்பு, ஜூன் 22

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நாட்டைச் சரியான பாதையில் கொண்டு செல்லும் இந்தப் பயணத்தை எவராலும் மாற்ற முடியாதென அநுராதபுரம் வரலாற்று சிறப்புமிக்க 14

## வல்லிபுரக் கோயிலுக்கு பக்தர்கள் செல்லத் தடை!

கட்டுப்பாடுகளை மீறியதால் இந்த நிலைமை

பருத்தித்துறை, ஜூன் 22

காய்ச்சலுடன் சுவாமி காவிய ஒருவரால், வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கு 14 நாள்கள் பொதுமக்கள் செல்வதற்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது. பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையாலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வல்லிபுர ஆழ்வார் கோயிலில் நேற்றுக் காலை பூசைகள் இடம்பெற்றன. முகக் கவசம் இன்றியும் தனிநபர் இடைவெளியைப் 14

## ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஒவ்வொரு சுகாதார அலுவலர்!

சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 22

நாடாளுமன்றத் தேர்தல் பணியின் போது நாட்டின் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஒரு சுகாதார அலுவலர் நியமிக்கப்படுவார் 14

## தேர்தல் முறைப்பாடுகளை முகாமை செய்வது எப்படி?

வட மாகாண சபைத் தேர்தல் காலத்து விடயங்களைக் கூறி மஹிந்த தெளிவுபடுத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 22

நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் கிடைக்கும் தேர்தல் முறைப்பாடுகளை எவ்வாறு முகாமை 15

## புதிய தொற்றாளர்கள் 2 நாள்களாக இல்லை

கொழும்பு, ஜூன் 22

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான எவரும் நேற்றும் அடையாளம் காணப்படவில்லை. இதேவேளை, தொற்றிலிருந்து குண 16

## முன்னரைவிடவும் கூட்டமைப்புக்கு இம்முறை அதிக ஆசனங்கள்

எதிர்வு கூறுகிறார் சம்பந்தன்



கொழும்பு, ஜூன் 22

வடக்கு, கிழக்கில் தமிழர்கள் நிரந்தரமாக நிம்மதியாக வாழக்கூடிய நிலைமைக்கு எதிராக பெரிய 16

# சந்தர்ப்பங்களைத் தவறவிட்டு மாயக்கண்ணீர் வடிப்பதில் அர்த்தமில்லை

## விக்கியைச் சாடுகிறார் தவராசா



**யாழ்ப்பாணம், ஜூன் 22**
**சந்தர்ப்பங்கள் கிடைத்தபோது பயன்படுத்தாது அசமந்தப் போக்காக இருந்துவிட்டு இன்று மாயக்கண்ணீர் வடிப்பதில் அர்த்தம் இல்லை. வடக்கின் தொல்பொருள் மற்றும் புராதன சின்னங்களை காப்பாற்றத் தவறியது வடக்கு மாகாண சபையே என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா குற்றஞ்சாட்டியுள்ளார்.**

வடக்கிலும் தொல்பொருள் மற்றும் புராதன சின்னங்களை அடையாளம் காண்பதற்கு செயலணி ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவினால் கிழக்கு மாகாணத்திலுள்ள மரபுரிமைகளை முகாமைத்துவம் செய்வதற்காக உருவாக்கப்பட்ட செயலணியின் உறுப்பினர் ஒருவர் கூறிய கருத்து தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கிழக்கு மாகாணத்திலுள்ள மரபுரிமைகளை முகாமைத்துவம் செய்வதற்காக உருவாக்கப்பட்ட செயலணியின் உறுப்பினர் ஒருவர் வடக்கு மாகாணத்திலும் அவ்வாறு ஒரு செயலணி உருவாக்கப்பட வேண்டும் என்று கூறியதைத் தொடர்ந்து ஏட்டிக்கு போட்டியாக இன்று பலர் அறிக்கைகள் விட்டவண்ணம் இருக்கின்றனர்.
ஆனாலும் குறித்த விடயம் தொடர்பாக எமக்கு இருக்கின்ற அதிகாரங்களை நாம் பயன்படுத்த தவறியதன் விளைவே இது என்பதனை அவ்வாறு அறிக்கைவிடும் தமிழ் அரசியல்வாதிகள் உணர்ந்து கொள்வார்களா?
தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என்று நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட சட்டத்தால் அல்லது சட்டத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்டவை தவிர, தொல்பொருள் சார் அமைவிடங்களும் புராதன விடயங்களும் ஒருங்கிய நிரலுக்குரிய விடயமாக 13 ஆவது திருத்தச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
ஒருங்கிய நிரலிலுள்ள விடயங்களுக்கு மாகாண சபையால் நியதிச் சட்டங்களை ஏற்படுத்த முடியும். அவ்வாறு நியதிச் சட்டங்கள் ஏற்படுத்தப்படும்போது நாடாளுமன்றத்துக்கு அனுப்பி அதன் அங்கீகாரத்தை பெற்றுத்தான் மாகாணசபை அங்கீகரித்தல் வேண்டும்.
சுற்றுலா விடயங்கள் ஒருங்கிய நிரலுக்குரிய விடயமாக 13 ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தும், எவ்விதத் தடைகளும் இல்லாமல் சுற்றுலா அதிகாரசபை நியதிச்சட்டம் வடக்கு மாகாணசபையால் நாடாளுமன்ற அங்கீகாரத்துடன் நிறைவேற்றப்பட்டது. வடமேல் மாகாண சபை அதே வழிமுறையில் சுற்றுச் சூழல் நியதிச் சட்டத்தை 1990 ஆம் ஆண்டில் உருவாக்கியிருந்தது.
அதேபோன்று தொல்பொருள் சார் விடயத்துக்கும் ஒருங்கிய நிரலில் கூறப்பட்டிருப்பதற்கு அமைவாக நியதிச் சட்டத்தை ஆக்குமாறு பலமுறை மாகாண சபையில் நான் முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தேன். எனது கோரிக்கைக்கு முதலமைச்சரோ அல்லது கூட்டமைப்பை பெரும்பான்மையாக கொண்ட மாகாண சபை உறுப்பினர்களோ அன்று முக்கியத்துவம் கொடுத்திருக்கவில்லை. அவ்வாறு நியதிச் சட்டத்தை உருவாக்கியிருந்தால் அந்த நியதிச் சட்டத்தின் கீழ் கொழும்பு அரசால் பிரகடனப்ப டுத்தப்படாத தொல்பொருள்சார் அமைவிடங்களையும் புராதன இடங்களையும் மாகாணசபையின் கீழ் பிரகடனப்படுத்தி அதன் பொறுப்பின் கீழ் கொண்டு வந்திருக்கலாம். அந்தவகையில் சந்தர்ப்பம் கிடைக்கும்போது அதனை பாவிக்காது காலத்தைக் கழித்து விட்டு இன்று மாயக்கண்ணீர் வடிப்பதில் அர்த்தம் இல்லை- என்றார். (ஒ.5)

# ஏ.எல். பரீட்சையை எப்போது நடத்துவது?

## ஆராய்வதற்கு குழு நியமிப்பு

கொழும்பு, ஜூன் 22
கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கான திகதி தொடர்பில் முன்வைக்கப்படும் யோசனைகளை பரிசீலிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.
கல்வி அமைச்சின் செயலர் என்.எச்.எம்.சித்ரானந்த தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில் கல்வி இராஜாங்க அமைச்சின் செயலரும் ஏனைய மேலதிக செயலர்கள் மற்றும் சிலரும் உள்ளடங்குகின்றனர். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் கருத்துகள் மற்றும் யோசனைகளை அதிபர்கள் ஊடாக அமைச்சுக்கு வழங்குமாறு அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்தக் கருத்துகள் மற்றும் யோசனைகள் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் இந்தமுறை உயர்தரப் பரீட்சையை ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தினத்தில் நடத்துவதா, இல்லையா? என்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.
தற்போது கிடைக்கப்பெற்றுள்ள நிலைப்பாடுகளின் அடிப்படையில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திகதியில் பரீட்சையை நடத்த முடியும் என பல தரப்பினரும் தெரிவித்துள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஒ,த)

# மருமகனால் தாக்கப்பட்டார் மாமனார்

கிளிநொச்சி, ஜூன் 22
கத்திக் குத்துக்கு இலக்கான குடும்பத் தலைவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சி கட்சன் வீதியிலுள்ள 5 வீட்டுத்திட்டப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
மாமன் மருமகனுக்கிடையிலான வாய்த் தர்க்கத்தின் போது மருமகன் மாமனாரை கத்தியால் குத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. நடராசா மருதலிங்கம் என்பவரே காயமடைந்தார். கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (த-113)

அனுமதி பெற்றவர்கள் மாத்திரமே

# புதூர் நாகதம்பிரான் ஆலய வழிபாட்டுக்குச் செல்லலாம்!

## சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 22
புதூர் நாகதம்பிரான் ஆலயத்துக்குச் செல்வதற்கு ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் மட்டுமே செல்ல முடியும். ஏனையோர் ஆலய உற்சவத்தில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்படமாட்டாது. இவ்வாறு வவுனியா வடக்கு சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் திருமதி அனோஜன் ரட்ஷாயினி தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவம் இன்று திங்கட் கிழமை இடம்பெறவுள்ளது. கொவிட் 19 பரம்பலை கட்டுப்படுத்தும் முகமாக எமது பிரதேசத்துக்கு உட்பட்ட இவ் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் கலந்து கொள்ள கோவில் நிர்வாகத்தினர் உள்ளிட்ட குறிப்பிட்ட நபர்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தத்தமது வீடுகளில் பாதுகாப்பாக இருந்து வழிபாடுகளில் ஈடுபடவும். சுகாதாரப் பணிப்பாளரின் சுற்றறிக்கைக்கு அமைய கூட்டு வழிபாட்டுக்கு அனுமதி வழங்க முடியாது. 80 பேருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனுமதி வழங்கப்பட்டவர்களுக்கு அதற்கான பாஸ் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுள்ளது. -என்றார். (ஒ.5,19)

# 4 பேரைக் காவு வாங்கியது கடல்

வத்தளை திக்கோவிட்ட பகுதியில் உள்ள கடலொன்றில் நீராடச் சென்ற நால்வர் உயிரிழந்தனர். அவர்களில் மூவர் பெண்கள்.
திக்கோவிட்ட மயானத்துக்கு முன்பாகவுள்ள கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை நீராடிக் கொண்டிருந்தபோதே அவர்கள் நால்வ ரும் உயிரிழந்தனர் என்று கூறப்படுகின்றது. 16, 20, 30 வயதான பெண்கள் மூவரும் 13 வயதான சிறுவனுமே உயிரிழந்தனர். மற்றொரு பெண் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரும் ஆபத்தான நிலையில் உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ,ம)

நயினாதீவு அம்மன்

# ஆலயத்தில் காலணியுடன் கடற்படையினர், பொலிஸார்

## பல தரப்பினரும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 22
வரலாற்றுசங சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மனின் வருடாந்த பெருந் திருவிழா நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. அன்றைய தினம் ஆலயச் சூழலில் பொலிஸார் மற்றும் கடற்படையினர் காலணியுடன் கடமையில் நின்றமை தொடர்பில் பலரும் விசனம் தெரிவித்து வருகின்றனர்.

**மறவன்புலவு சச்சிதானந்தன்**
'அரசின் காவலரும் படையினரும் நயினாதீவு அருள்மிகு நாகபூசணி அம்மன் கோயில் வளாகத்துள் காலணியைக் கழற்றி வைக்காமல் புகுந்தனர் என்ற செய்தியைப் படித்ததும் சைவ உலகம் நெஞ்சு பதைபதைத்து மனம் புண்ணாகி வேதனை அடைந்தது. விதிகளைப் பேணுமாறு குடிமக்களிடம் நெருக்குகிற காவல்துறை அதிகாரிகளே இவ்வாறு நடந்து கொண்டார்கள். சைவமும் புத்தமும் 2 ஆயிரத்து 500 ஆண்டுகளாகப் பேணும் நடைமுறைகளை மறந்தார்கள். கண்டி தலதா மாளிகைக்குள் இவ்வாறு போவார்களா? சிற்றூரில் உள்ள புத்த பன்சாலைக்குள் இவ்வாறு போவார்களா? தமிழ்ச் சைவ நிலப்பகுதிகள் அடிமை கொண்ட நிலப்பகுதிகள் என்று கருதியே இவ்வாறு எதேச்சாதிகாரம் ஆகக் காவலர் நடந்துகொள்கிறார்கள். சைவர்களின் மனதைப் புண்படுத்துகிறார்கள் ' என்றார் மறவன்புலவு சச்சிதானந்தன்.

**தவத்திரு உமாபதி சிவம் அடிகளார்**
நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தின் கோபுர வாசலில் பாதணிகளுடன் பொலிஸார், கடற்படையினர் காணப்படும் காட்சிகள் மனதை நெருடுகின்றது. உடனடியாக இந்தச் செயற்பாடுகள் கைவிடப்பட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நயினை நாகபூசணி அன்னையின் ஆலய கோபுர வாசலில் உட்புறத்தில் பாதணிகளுடன் பொலிஸார் கடற்படையினர் கடமையில் ஈடுபடும் காட்சிகள் சைவத் தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்துகின்றன, என்று தெரிவித்துள்ளார். (ஒ.5)

# நாடாளுமன்றத்துக்கு புலியாக வருவதற்கு கருணா முயற்சி!

## சம்பிக்க தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 22

தேசியப் பட்டியலில் நாடாளுமன்றத்துக்கு வருமாறு கருணா என்ற விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ள நிலையில், இராணுவத்தைச் சேர்ந்த 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் பேரை கொலைசெய்த தமிழ் புலி வீரனாக கிழக்கு தமிழ் மக்களின் ஆசியுடன் நாடாளுமன்றத்துக்கு வருவதற்கு முயற்சிக்கின்றார். இவ்வாறு முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உண்மையில் அரசு படையினரைக் காட்டியே வாக்கு கேட்டு வருகிறது. படையினர் நாட்டுக்காக உயிரை கொடுத்தனர். படையினரின் உரிமைகளை பாதுகாக்கும் அரசு போலவே தற்போதைய அரசு செயற்பட்டு வருகிறது. சில வேட்பாளர்கள் தாம் இராணுவத்தை சேர்ந்தவர்கள் என்று வாக்கு கேட்கின்றனர். படையினருக்காக நாங்கள் ஜெனிவாவுக்கு சென்றோம். படையினருக்காக எமக்கு வாக்களியுங்கள் என சில வேட்பாளர்கள் உரத்த குரலில் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

கருணா அம்மான் என்ற விநாயக மூர்த்தி முரளிதரன் விடுதலைப் புலிகளின் ஆயுதப் படைப் பிரிவின் தலைவராக இருந்தார். அவர் அந்தக் காலத்தில் குற்றங்களை செய்ததாக கூறினார். எனினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கான சாட்சியங்களும் முன்வைக்கப்படவில்லை. அவர் வேறு கட்சியில் போட்டியிட்டாலும் மஹிந்த ராஜபக்ஷவுக்கே ஆதரவு வழங்குவதாக அவர் கூறியுள்ளார். தேசிய பட்டியலில் வருமாறு அழைப்பு விடுத்தனர். எனினும் தேசிய பட்டியலில் செல்லும் எண்ணம் இல்லை. தமிழ் மக்களின் ஆசியுடன் கிழக்கு மாகாணத்தில் இருந்து நாடாளுமன்றத்துக்குச் செல்லப் போவதாக கூறுகிறார்.

இலங்கை இராணுவத்தை சேர்ந்த 3 ஆயிரம் பேரை கொன்ற புலி வீரனாக நாடாளுமன்றத்துக்குச் செல்ல முயற்சித்து வருகிறார். கொழும்பு உட்பட ஏனைய பிரதேசங்களில் படையினருக்காக வாக்கு கேட்கின்றனர். இதன் மூலமே ராஜபக்ஷவினரின் மோசடியான இரட்டை நிலைப்பாடு தெரிகிறது. எவ்வாறாயினும் கருணா அம்மான் குற்றவாளி என்பதற்கான சாட்சியம் தற்போது கிடைத்துள்ளது.

குற்றவியல் சட்டம் மற்றும் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் உடனடியாக அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதேபோல் கே.பி. என்ற குமரன் பத்மநாதனுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார். (ஓ.5)

---

# கருணாவைக் கைதுசெய்தாலே ராஜபக்ஷக்கள் துணிவுள்ளவர்கள்

## ஐக்கிய பிக்குகள் முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 22

இராணுவத்தினரைக் கொலை செய்ததாக கூறியுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனின் கருத்துத் தொடர்பில் அவதானம் செலுத்தி அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவும் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவும் எடுப்பார்களாயின் அவர்களே நாட்டின் துணிவுள்ள தலைவர்கள் என்பதை ஏற்றுக்கொள்வோம் என்று ஐக்கிய பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும், ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன கூட்டணியின் கிழக்கு மாகாண வேட்பாளருமான கருணா அம்மான் கிழக்கில் தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் பேசும் போது, தான் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கியஸ்தராக செயற்பட்ட காலத்தில் ஒரே இரவில் 2 ஆயிரம் தொடக்கம் 3 ஆயிரம் வரையான இராணுவத்தினரைக் கொலை செய்ததாக தெரிவித்துள்ளார். இது பெரும் சமூக குற்றச் செயலாகும். இந்த கருத்தானது தேசப்பற்றுள்ள மக்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. போர்க் காலத்திலே உயிரிழந்த இராணுவத்தினரில் எமது இரத்த உறவுகளும் உள்ளடங்குகின்றனர். சமூக குற்றங்களைச் செய்துள்ள பயங்கரவாத குழுவின் முக்கியஸ்தர் ஒருவருக்கு சிங்கள பௌத்த மக்களினதும், இராணுவத்தினரதும் அபிமானத்தை பாதுகாப்பதாக கூறிக் கொண்டு மக்களின் நம்பிக்கையை வென்று இன்று ஆட்சியமைத்துள்ள கோத்தபாய மஹிந்தவின் அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது? இராணுவத்தினரின் உயிரிழப்புக்கு காரணமான கருணாவுக்கு மக்களிடம் அறவிடப்படும் வரிப் பணத்திலிருந்து வாழ்க்கை நடத்துவதற்கான சந்தர்ப்பத்தையும், அரசால் கிடைக்கப் பெறும் அனைத்து வரப்பிரசாதங்களையும் ராஜபக்ஷாக்கள் பெற்றுக் கொடுத்துள்ளனர். ஜனாதிபதித் தேர்தல் காலத்திலே சிங்கள பௌத்த மக்களுக்காகவும், இராணுவத்தினருக்காகவும் குரல் எழுப்பிய பிக்குகள் தற்போது எங்குள்ளார்கள்? ஜனாதிபதித் தேர்தல் காலத்திலே சிங்கள பௌத்த மக்களையும், இராணுவத்தினரையும் ஏமாற்றி அவர்களை காட்டிக் கொடுத்து சில தேரர்கள் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டதை அவதானித்திருந்தோம்.

இந்நிலையில் கருணாவின் கருத்துத் தொடர்பில் மக்கள் மத்தியில் வந்து மதபோதனைகளை வழங்கும் தேரர்கள் அவர்களின் கருத்தை நாட்டுக்குத் தெரியப்படுத்த வேண்டும். பொதுஜன பெரமுனவினர் எப்போதும் நாட்டுக்கு வைரஸ்களையே விதைத்துள்ளனர். கருணாவின் கருத்தின் மூலம் அரசியல் இலாபத்தை பெற்றுக்கொள்ளவே இவர்கள் எண்ணியிருக்கின்றனர். கிழக்கில் இராணுவத்தினரை கொலை செய்ததாக குறிப்பிட்டு தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதுடன், தெற்கில் இராணுவத்தினர் கொலை தொடர்பில் அச்சுறுத்தல் விடுத்து இனியொரு காலமும் இவ்வாறான நிலைமை ஏற்படக்கூடாது என்ற அச்சத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வாக்குகளை கைப்பற்ற எண்ணியுள்ளனர்.

சிறு குற்றச் செயல்கள் தொடர்பிலும் பலர் சிறைவைக்கப்பட்டுள்ள வரலாறை எம் நாடு கொண்டுள்ளது. இந்தவகையில் கருணா அம்மானின் கருத்திலிருந்து அவர் மாபெரும் குற்றச்செயலை செய்துள்ளமை புலப்படுகின்றது. அதனால் கருணாவுக்கு எதிரான சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும், என்றனர். (ஓ.5)

---

# சுகாதார வழிமுறைகள் வர்த்தமானி இன்று

கொழும்பு, ஜூன் 22

சுகாதார வழிமுறைகளுடன் பொதுத் தேர்தலை நடத்துவது தொடர்பான வழிமுறைகள் அடங்கிய வர்த்தமானி வெளியிடப்படவுள்ளது. குறித்த வர்த்தமானி இன்று திங்கட்கிழமை நள்ளிரவு வெளியிடப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார். (ஓ.க)

---

# மாவா, ஐஸ் போதைப்பொருள்களுடன் கைது

கொடிகாமம், ஜூன் 22

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் மாவா மற்றும் ஹெரோய்ன் போதைப் பொருள்களுடன் ஐந்து பேர் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்:

குருநகர் பகுதியில் மாவா போதைப் பொருளுடன் இருவரும், பொம்மை வெளிப்பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவரும் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் இருவருமாக ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஓ.5,159)

---

புலிகளை துடைத்தொழிக்க உதவியதால்

# கருணா அம்மானை மன்னித்து விட்டோம்

## இப்படிச் சொல்கிறார் எஸ்.பி.




கொழும்பு, ஜூன் 22

வடக்கில் புலிகளை ஒழிப்பதற்கான படையினர் முன்னெடுத்த போருக்கு கருணா அம்மான் ஒத்துழைப்பு வழங்கினார். அவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுமக்கள் முன்னணியின் உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.திஸாநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

ஆனையிறவு சமர் தொடர்பில் கருணா அம்மன் வெளியிட்டுள்ள கருத்து தெற்கு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு அவசியம் என்றும், கருணா அம்மானிடம் விசாரணை நடத்தப்படவேண்டும் எனவும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்திவருகின்றன. இந்த நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட எஸ்.பி. திஸாநாயக்க,

புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாண தலைவராக செயற்பட்ட கருணா அம்மானே, புலிகள் அமைப்பை இரண்டாக பிளவுபடுத்தி, பிரபாகரனை தனிமைப்படுத்திவிட்டு எம்முடன் இணைந்தார். வடக்கில் புலிகளை ஒழிப்பதற்கு தீர்க்கமான ஒத்துழைப்பை வழங்கினார். அதாவது அரச தரப்பு சாட்சியாக மாறுவதுபோல்தான் அவர் செயற்பட்டார். புலிகளை ஒழிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அவருக்கு சட்டபூர்வமாக மன்னிப்பு இருக்கின்றது, என்றார். (ஓ.5,44)

---





# இராட்சத சுறா அம்பாறையில்!

அம்பாறை, ஜூன் 22

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பெரியநீலாவணை கடற்கரையில் கரைவலை மீன்பிடியில் 20 அடி நீள மான இராட்சத மீன் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை அகப்பட்டது. அது கொடுப்புலி மடையன் சுறா என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது உணவுப் பாவனைக்கு பயன்பபாது எனவும், இயற்கையாக நோய் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளது என்றும் மீனவர்கள் கூறுகின்றனர். (ஓ.எ,ரீ)





# சட்டவிரோத மணல் அகழ்வால் அழிகின்ற நிலையில் பேராறு!

**மன்னார், ஜூன் 22**

**முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவு, புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவு மற்றும் முள்ளியவளை பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட பேராற்றுப்பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இதனால் அந்த ஆறு அழிவடையும் நிலையில் உள்ளது. அத்துடன் பெரும் மரங்களும் வேருடன் சாயும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.**

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது:

முத்துஐயன்கட்டு குளத்தின் கலிங்கிலிருந்து ஆரம்பித்து செல்லும் இந்த பேராறுப் பகுதியில் தொடர்ச்சியாக மணல் மாபியாக்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

இதனால் எதிர்காலத்தில் மக்கள் பெரும் விளைவுகளை சந்திக்க நேரிடும். இவற்றை தடுக்கும் வகையில் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவு மற்றும் முள்ளியவளை பொலிஸ் பிரிவு பொலிஸார் கடும் முனைப்புடன் செயற்பட வேண்டும். விவசாய நவீன மயமக்கல் திட்டத்தின் கீழ் முத்தையன்கட்டு குளத்தினை நம்பி பேராற்று பகுதியினை அண்டிவாழும் விவசாய குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அரசு விவசாய உள்ளீடுகளை வழங்கி விவசாய செய்கையினை ஊக்குவித்து வரும் வேளையில் சுமார் 15 கிலோ மீற்றருக்கும் அதிக நீளம்கொண்ட பேராற்று பகுதியினை அண்டிய பகுதிகளில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சட்விரோத மணல் அகழ்வு நடவடிக்கையால் இயற்கை வளம் முற்று முழுதாக அழிவடையம் அபாய நிலை ஏற்பட்டுள்ளது - என்றனர். (ம-19)

# போர்க்காலம் போன்றே வடக்கில் சோதனைகள்

## சஜித் ஆதரவு அணி குற்றச்சாட்டு

வவுனியா, ஜூன் 22

போர்க்காலத்தைப்போன்று வடக்கில் இராணுவச் சோதனைச் சாவடிகள் நிறுவப்பட்டுள்ளன என ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி நாடாளுமன்ற வேட்பாளர் எ.கமிலஸ் றொகான் குற்றச்சாட்டினார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கில் கடந்த ஐந்து வருட காலத்தில் தமிழ் மக்கள் இராணுவ ஆக்கிரமிப்பு இல்லாமல் சுதந்திரமாக நடமாடக்கூடியதாக இருந்தது. ஆனால் ஆட்சி மாற்றத்தின் பின்பாக அவ்வாறான நிலைமை காணப்படவில்லை.

கோத்தாபய ராஜபக்ஷ வெற்றிபெற்றதன் பின்னர் வடக்கு மாகாணத்தில் இராணுவச் சோதனைச் சாவடிகள் நிறுவப்பட்டு தமிழ் மக்கள் மீது போர்க்காலத்தைப் போன்று சோதனை நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இது சிறுபான்மை மக்களுக்கு ஆபத்தானது என்பதுடன் நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படக்கூடிய அபாயம் காணப்படுகின்றது.

அத்துடன் புலம்பெயர் சமூகம் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள், சுற்றுலாப் பயணிகள் எமது வடக்கு மாகாணத்துக்கு வருவதற்கான தடையாகவே இராணுவச் சோதனை சாவடிகளைப் பார்க்க முடியும். அதன் காரணமாக தமிழ் மக்கள் எதிர்காலத்தில் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் துறைகளில் சிரமங்களை எதிர்நோக்கும்போது அபிவிருத்தி என்பது காணப்படாது-என்றார். (ப)



# ஒரு சில ஊடகங்கள் பக்கச்சார்பானவை

## கரு ஜயசூரிய விசனம்

கொழும்பு, ஜூன் 22

தேர்தல் வேளையில் ஊடகங்கள் மக்கள் பக்கம் நிற்பதுடன், எந்தவொரு அரசியல் பக்கச்சார்புமின்றி உண்மையை மக்களிடம் கொண்டுசேர்க்க வேண்டிய பொறுப்பைக் கொண்டிருக்கின்றன. ஆனால் சில ஊடக நிறுவனங்கள் பக்கச்சார்பாகவே செயற்படுகின்றன என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

தனது ருவிட்டர் பதிவிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்தப் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தேர்தல் வேளையில் ஊடகங்கள் மக்கள் பக்கம் நிற்பதுடன், எந்தவொரு அரசியல் பக்கச்சார்புமின்றி உண்மையை மக்களிடம் கொண்டுசேர்க்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளன. எது எவ்வாறெனினும் சில ஊடகநிறுவனங்கள் பக்கச்சார்பாகவே செயற்படுகின்றன.

அவை கொள்கை ரீதியில் அரசியல் கட்சிகளை மக்கள் அணுகுவதற்கு, உதவுவதற்குப் பதிலாக, சேறுபூசும் அரசியல் கலாசாரத்தையே காண்பிக்கின்றன - என்றுள்ளது. (ம)

# பொதுத்தேர்தலை மையப்படுத்தி இரவிரவாக மக்களுக்கு பொதிகள்

## முன்னாள் இராஜாங்க அமைச்சர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஜூன் 22

இரவு நேரங்களில் பொதிகள் வழங்குபவர்கள் வெற்றி பெற்றால் வருங்காலத்தில் இந்தச் சமூகத்தைப் பணம் படைத்த முதலாளிகள் தங்களுடைய பணத்தால் ஆட்சி செய்யும் துர்ப்பாக்கியமான நிலைமையும் ஏற்படும் என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்பொழுது தேர்தலை மையப்படுத்தி மட்டக்களப்பு, கல்குடாவில் எதிரணி அயலூர் வேட்பாளர்கள் இரவு நேரங்களில் பொதிகள் வழங்குபவர்களாகவும் சவூதியிலிருந்து வந்த பணத்தை பங்கிடுகின்றவர்களாகவும் உள்ளனர்.

அவர்கள் ஒரு வேளை வெற்றி பெற்றால் வருங்காலத்தில் இந்தச் சமூகத்தை பணம் படைத்த முதலாளிகள் தங்களுடைய பணத்தால் ஆட்சிசெய்யும் துர்ப்பாக்கியமான நிலைமையும் ஏற்படக்கூடும்- என்றார். (ப)



# அவன்கார்ட் கப்பலில் மீள 23 இந்தியர்கள்!

கொழும்பு, ஜூன் 22

அவன்காரட் நிறுவனத்தின் கப்பல்களில் பணியாற்றுவதற்காக மீண்டும் இந்தியப் பிரஜைகள் இலங்கை வந்தடைந்துள்ளனர். எவன்காரட் நிறுவனத்தின் கப்பல்களில் இவர்கள் விரைவில் பணிகளைத் தொடங்குவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் அவர்கள் நேற்றுமுன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரீ1)

# கோத்தாபயவுக்கு மஸ்தான் புகழாரம்

மன்னார், ஜூன் 22

கடந்த அரசாங்கம் இப்போது அதிகாரத்தில் இருந்திருந்தால் மக்களில் அதிகமானோர் கொரோனா வந்து இறந்திருப்பர் கோத்தாபய ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கம் அவ்வாறான நிலைமையைத் தடுத்துள்ளது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பொதுஜன பெரமுன கட்சியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளருமான காதர் மஸ்தான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அரசாங்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இணைந்து ஆளும் கட்சியாகவே செயற்பட்டது. எங்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை என தமிழ் மக்களின் பிரதான கட்சி ஒன்றின் தலைவர் தெரிவித்திருந்தார். ஆனாலும் அவர்கள் ஆளும் கட்சியில் இருந்தனர். அதன் மூலம் 'கம்பரலிய' போன்ற பல்வேறு திட்டங்களை மேற்கொண்டனர். தேர்தல் காலப்பகுதியில் தமிழ் கட்சிகள் பலர் கோத்தாபய ராஜபக்ஷ வெற்றிபெற்றால் வெள்ளைவான் வரும் என பல பொய்யான பரப்புரைகளை மேற் கொண்டனர்.

ஆனாலும் இந்த 8 மாத காலப்பகுதியில் சிறப்பான ஒரு ஆட்சியை ஜனாதிபதி நடத்தியுள்ளார். இந்தத் தேர்தலில் பெரும்பான்மைச் சமூகத்தின் ஆதரவுடன் ஆட்சி அமையும் சந்தர்ப்பம் உள்ளது.

கடந்த தேர்தலில் விட்ட தவறை மீண்டும் விடாமல் ஆளும் கட்சிக்கு ஆதரவளித்து எமது அபிவிருத்தி, உரிமை என அனைத்தையும் ஆளும் கட்சியில் இருந்தாலே பெறமுடியும்-என்றார். (ப-56)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இதற்கும் நீதி எட்டாக்கனியே!

மணற் கொள்ளையர்களுக்கு வேவு பார்த்தார் என்று கூறி, இளைஞர் ஒருவரை நேற்றுச் சுட்டுத்தள்ளியிருக்கிறது படைத்தரப்பு. ஆனால் அவர் வேவு பார்த்தாரா இல்லையா என்பதற்கு எவ்வித ஆதாரங்களுமில்லாமலேயே, சுடப்பட்டிருக்கிறார். வேகமாக மோட்டார் சைக்கிளில் வந்த குறித்த இளைஞர், அதே வேகத்தில் சிப்பாய் ஒருவரை மோதித்தள்ளிவிட்டுச் சென்ற போதே, அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கிறது. தன்னை மோதிவிட்டு நிற்காமல் செல்பவன் மீது சாதாரணமாக எல்லோருக்கும் கோபம் வரும். அப்படிப்பட்ட சூழ்நிலைக் கோபத்தால், குறித்த சிப்பாய் அந்த இளைஞன் மீது கண்மூடித்தனமாகச் சுடப்போய், அது உயிர்ப்பலியில் முடிந்திருக்கவே அதிக வாய்ப்பென்பது அந்தப்பகுதி மக்களின் கருத்து.

ஏனெனில் குறித்த இளைஞர் சுடப்பட்டதோ மோட்டார் சைக்கிளில் செல்லும்போதுதான். ஆனால் அவர் படுகாயமடைந்த நிலையில் மணல் ஏற்றிய உழவியந்திரத்துக்குள் போடப்பட்டிருந்தபோதே, பொதுமக்களால் மீட்கப்பட்டிருந்தார். அப்படி படுகாயமடைந்து உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தவரை எதற்காக படையினர் அவசர அவசரமாக மணல் ஏற்றும் உழவியந்திரத்துக்குள் மாற்றினார்கள்? மணற்கொள்ளையைத் தடுக்க வேண்டியது பொலிஸாரின் கடமையாக இருக்கும் போது எப்படி படைத்தரப்பு மூக்கை நுழைத்தது? வேகமாக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருப்பவர் மீது தலையில் சுடும் அதிகாரத்தை கொடுத்தது யார்? அப்படி ஒருவேளை அந்த இளைஞர் தப்பித்துச் சென்றிருந்தாலும், இளைஞனுக்கு உயிராபத்து நேராத வண்ணம் காலுக்கு கீழேதானே சுட வேண்டும். அப்படியிருக்கையில் ஏன் இளைஞனின் தோள்பட்டை, தலை என்பவற்றில் சூடுகள் விழ வேண்டும்? என்று நிறையக் கேள்விகள் இருக்கின்றன. ஒரு வேளை, படையினரின் பிடியில் இருந்து தப்பித்துச் சென்றவர், குறித்த இளைஞன் பற்றிய தகவலைச் சொல்லி அவரை மீட்டிராவிட்டால், அவர் சிலவேளை காணாமல் ஆக்கப்பட்டோரின் பட்டியலில் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கவும் கூடும்.

இந்தநிலையில் படைத்தரப்புக்கு எதிராக மக்கள் போராட முற்பட்டனர். பின்னர் அதுகுறித்து பொலிஸார் கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில் அவர்கள் கலைந்து சென்றனர். மணற்கொள்ளையில் ஈடுபட்டவர் என்று சொல்லி, ஏன் தலையில் சுட்டு உயிரைப் பறித்தார்கள்? அவரைக் கைதுசெய்திருக்கலாமே. இல்லாவிட்டால் காயமடைந்தவுடன் வைத்தியசாலையில் சேர்த்திருக்கலாமே? என்று கேட்டு அவர்கள் போராடியிருந்தனர். அவர்கள் கேள்வியிலும் ஒரு நியாயம் இருக்கவே செய்கின்றது. இதேபோன்று தென்னிலங்கையில் ஒரு சிங்கள இளைஞர் சிப்பாய் ஒருவரை மோட்டார் சைக்கிளால் மோதிவிட்டுப் போனால் சுட்டுத்தள்ளும் தைரியம் வந்திருக்குமா? ஒருவேளை அப்படிச் சுட்டிருந்தாலும், உடனடியாகவே அந்தச் சிப்பாய் கைதுசெய்யப்பட்டு சிறைக்குள் தள்ளப்பட்டிருப்பார். இங்கு நடந்ததைப் போல மணல் ஏற்றப்பட்ட உழவியந்திரத்துக்குள் போடப்பட்டு, மணற்கொள்ளைக்கு வேவு பார்த்தார் என்ற கதைச் சோடிப்பும் நடந்திருக்காது.

இந்த இளைஞனின் சாவுக்கு நீதி கேட்டு மக்கள் தொடர்ச்சியாகப் போராடினாலும்கூட நியாயம் கிடைக்குமா என்பதும் சந்தேகமே. ஏனெனில் இது போன்றே வடமராட்சியிலும் மணல் கடத்தியதாகக் கூறி இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். அதைவிட கஜன், சுலக்சன் என்ற பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் நள்ளிரவுப் பொழுதொன்றில் பொலிஸாரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அவற்றுக்கெல்லாம் நீதி கேட்டு பல போராட்டங்கள் நடந்தன. ஆனால் எதுவுமே நடக்கவில்லை. கடைசியில் நாம் அவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர்களை மறந்து போனதுதான் மிச்சம். அப்படியே இந்தச் சம்பவத்துக்கும் நீதி கேட்டும் கிடைக்கப்போவதில்லை. பேய்களின் ஆட்சியில் நீதியை எதிர்பார்ப்பது எட்டாக் கனிக்கு கொட்டாவி விடுவதற்கு ஒப்பானதே.

# உறுதியான அரசை அமைக்க அனைவரும் ஒன்றிணையுங்கள்

## மஹிந்த அறைகூவல்



கொழும்பு, ஜூன் 22

ஜனாதிபதித் தேர்தலின் வெற்றி பொதுத் தேர்தலின் வெற்றியிலேயே முழுமை பெறும். நாடாளுமன்றத்தில் நிலையான அரசை அமைப்பதற்கு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்காலத் தலைமுறையினருக்காக நாட்டின் தேசிய வளங்கள் பாதுகாக்கப்படும். 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நாம் தோல்வியடைந்தோம். அவ்வருடம் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட அனுமதி கிடைக்கப்பெற்றது. நான் நாட்டுக்கு செய்த சேவையின் காரணமாக மக்கள் என்னை ஆதரித்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைத்தனர்.

நாட்டின் தேசிய வளங்கள் பாதுகாக்கப்படும். கடந்த அரசு அபிவிருத்திப் பணிகளுக்கு முக்கியத்துவம் வழங்கவில்லை. எமது அரசு செய்த அபிவிருத்தி பணிகளை கடந்த அரசு மலினப்படுத்தியது. அரசியல் தேவைகளின் காரணமாகப் பல அபிவிருத்தித் திட்டங்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டன. இதன் பாதிப்பினை சாதாரண மக்களே எதிர்க்கொண்டார்கள். தேசிய வளங்களை பிற நாட்டவர்களுக்கு தாரைவார்ப்பது கடந்த அரசின் கொள்கையாகக் காணப்பட்டது.

பல எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நிர்மாணித்த அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவிற்கு வழங்கப்பட்டுள்ளது. இத்துறைமுகத்தின் பயனை நாம் பெறமுடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது. மத்தள விமான நிலையத்தை விற்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. எமது எதிர்ப்பினால் அது தடைப்பட்டது. தேசிய வளங்களைப் பாதுகாப்பது எமது பிரதான நோக்கமாகும்.

ஜனாதிபதியும், பிரதமரும் முரண்பட்ட விதத்தில் செயற்பட முடியாது. நாட்டை நிர்வகிக்கும் இரண்டு தலைவர்களும் ஒன்றிணைந்து செயற்படாவிட்டால் ஏற்படும் விளைவுகள் என்னவென்று கடந்த ஆட்சியில் கண்டோம். இவர்களின் முரண்பாடுகளினால் தேசிய அடிப்படையிலும், நாடு என்ற ரீதியிலும் பலவீனமடைந்துள்ளோம் - என்றார். (ம)

## பெரமுன வேட்பாளருக்கு ஜனநாயக முன்னணி ஆதரவு

வவுனியா, ஜூன் 22

ஸ்ரீலங்கா பொதுமக்கள் முன்னணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் கேணல் ரட்ணபிரியபந்துவுக்கு புதிய ஜனநாயக மக்கள் முன்னணி ஆதரவை வழங்கியுள்ளது.

அவருடைய பரப்புரைக் கூட்டம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது.

இதன்போது புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான நடராஜா அரவிந்குமார் தலைமையிலான கட்சி உறுப்பினர்கள் வேட்பாளர் கேணல் ரட்ணபிரியபந்துவுக்கு தமது ஆதரவை வழங்கினர்.

மக்கள் விடுதலை முன்னணியின் வவுனியா நிர்வாக குழு உறுப்பினர்கள் சிலரும் அவருக்கு ஆதரவு வழங்கினர். (த-18)

## ஆபிரிக்காவிலிருந்து 289 பேர் திரும்பினர்

ஆபிரிக்க நாடுகளில் தொழில் புரிந்த 289 இலங்கையர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நாடு திரும்பினர்.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விசேட விமானத்தின் மூலம் இவர்கள் நாட்டை வந்தடைந்தனர் என்று கட்டுநாயக்க விமான நிலையத்தின் கடமை நேர முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

மடகஸ்கார், மொசாம்பிக், உகண்டா, கென்யா, ருவண்டா மற்றும் தன்சானியா ஆகிய நாடுகளில் ஹோட்டல்களில் பணிபுரிந்தவர்களும் நாட்டுக்குத் திரும்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# பி.சி.ஆர் பரிசோதனைகளை ஆயிரமாக அதிகரிக்க முடிவு

கொழும்பு, ஜூன் 22

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை ஆயிரமாக அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சுகாதார அமைச்சுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தை விரைவில் திறக்கும் நோக்கில் சுகாதார அமைச்சுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதற்காக 8 பேர் கொண்ட அதிகாரிகள் குழுவொன்றை நியமிக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையை 2 மணித்தியாலங்களுக்குள் பயணிகளிடம் ஒப்படைப்பதற்கான திட்டமொன்றை வகுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டுக்கு வருகைதரும் பயணிகளுக்காக, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை மீளத் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனினும் அடுத்த மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் விமான நிலையத்தை மீளத் திறக்குமாறு சுற்றுலாத்துறை பிரதிநிதிகள் கோரியுள்ளனர்.

உலகின் பல நாடுகளிலும் விமான சேவைகளுக்குத் தொடர்ந்தும் தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தக் கோரிக்கை தொடர்பில் பரிசீலிக்கப்படுமென பிரதமர் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (கு)

# கோத்தாவின் கொள்கைகளுடன் சஜித்தால் இணையவே முடியாது

## வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 22**

**மைத்திரி ரணில் தலைமையிலான முரண்பாடான அரசாங்கத்தைப் போன்றதொரு அரசை இம்முறை மக்கள் தோற்றுவிக்கமாட்டார்கள் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பொதுத்தேர்தலுக்குப் பின்னர் அரசாங்கத்தையும் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தாவையும் கைப்பற்றுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிடுவது நகைப்புக்குரியது. ஜனாதிபதியுடன் இணக்கமாகச் செயற்பட முடியும் என்று தற்போது இவர்கள் குறிப்பிடுவதன் பின்னணி என்ன என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இருவேறுப்பட்ட கொள்கைகளைக் கொண்ட அரசியல் கட்சிகள் இணைந்து அரசாங்கத்தை அமைத்து அதனைச் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பது நல்லாட்சியில் உருவாக்கப்பட்ட தேசிய அரசாங்கத்தின் ஊடாகத் தெளிவுப் படுத்தப்பட்டது.

காலம்காலமாக இரு வேறுப்பட்ட கொள்கைகளைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவை இணைந்து செயற்படக் கூட்டணியமைத்தும் வெற்றி பெறவில்லை. அரசியல் கொள்கையின் அடிப்படையில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஒரு கட்சியைப் பிரதிநிதித்து வப்படுத்துபவர்களாகத் தெரிவு செய்யப்பட வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் முரண்பாடுகள் முழு நாட்டையும் இல்லாதொழித்தன. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் இன்றும் பல கேள்விகளை ஏற்படுத்திய வண்ணம் உள்ளது. இன்றும் இவ்விருவரும் ஆணைக்குழுக்கள் எழுப்பும் கேள்விகளுக்கு முரண்பாடான விதத்திலே கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். ஜனாதிபதியின் கொள்கைகள் ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கைக்கு முற்றிலும் முரணானது. இரு தரப்பினரும் ஒருபோதும் ஒன்றிணைந்து அரசியல் ரீதியில் பயணிக்க முடியாது - என்றார். (ப)



# சட்ட விரோத செயற்பாடுகள் இம்மாதத்தில் 78 பேர் கைது

கிளிநொச்சி,ஜூன் 22

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த மாதம் இதுவரை கசிப்பு மற்றும் சட்ட விரோத மணல் அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுப்பட்ட 78 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை கசிப்பு உற்பத்தியில் ஈடுப்பட்ட 37 பேரும், சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுப்பட்ட 41 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இதன் போது 28 டிப்பர்களும், 13 உழவு இயந்திரங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. அண்மைக்காலமாக சட்டவிரோத மணல் அகழ்வு அதிகரித்து வந்துள்ள நிலையில், அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் பொலிஸார் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அந்த வகையில் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்கள் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் - என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. (க-214)



# பாதுகாப்பான தாயகத்தை தமிழர்கள் மீட்டெடுப்போம்

## வவுனியாவில் உறவுகள் கவனவீர்ப்பு

வவுனியா,ஜூன் 22

தமிழர்கள், பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட தாயக்கத்தை பெறுவதைப் பற்றிய வழியை நோக்கி நகர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சர்வதேச தந்தையர் தினத்தை முன்னிட்டு உறவினர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் உறவினர்கள் தெரிவித்ததாவது,

“கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இறந்த புலம் பெயர்ந்த தமிழ் தந்தையர்களையும் நாம் நினைவில்கொள்ள விரும்புகிறோம். இங்கு, மூன்று இனங்களையும் சித்திரவதை செய்த இடங்களைக் கண்டுபிடிக்கும் பெயரில், மூன்று இனங்களையும் ஒன்றாகக் கொண்டு வருவதற்கான முயற்சி உள்ளது என்பதை நாங்கள் குறிப்பிட விரும்புகிறோம். இது மூன்று இனங்களும் ஒன்றுபட்டது என்ற உணர்வை இறுதியில் உருவாக்கும். இதனால் தமிழர் பிரச்சினை உள்நாட்டு பிரச்சினையாக மாற்றப்படும்.

இலங்கைக்கு சர்வதேச அழுத்தம் வேண்டும் என காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் தாய்மார்கள் கேட்கிறார்கள். அழுத்தம் என்பது, மீன்பிடி ஏற்றுமதியை நிறுத்துவது போன்றது. எனவே அழுத்தம் தமிழருக்கு ஒன்றையும் செய்யாது. இது இலங்கையைத் தான் பாதுகாக்கும். எனவே, தமிழர்கள், பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட தாயக்கத்தை பெறுவதை பற்றிய வழியை நோக்கி நகர வேண்டும். என்றனர்.

போராட்டத்தின் இறுதியில் காணாமல்போன தனது மகனைத்தேடி போராட்டங்களில் கலந்து கொண்டு அண்மையில் உயிரிழந்த நல்லதம்பி ஜயாவின் ஆத்மா சாந்தியடைய மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (க-110)

# தனிமைப்படுத்தப்பட்ட 14 குடும்பங்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 22

ஏழாலையில் கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்பில் தனிமைப்படுத்தப்பட்டு வைக்கப்பட்ட 14 குடும்பங்களுக்கு சுகாதாரப் பிரிவினரின் வேண்டுகோளுக்கு அமைவாகப் பல்வேறு அமைப்புகளாலும் உலர் உணவுப் பொருள்கள் மற்றும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பு 12 குடும்பங்களுக்கு தலா ஆயிரத்து 700 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களும், சூராவத்தை சமூக இளைஞர் நற்பணி மன்றத்தால் 14 குடும்பங்களுக்கு தலா 3 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, சுன்னாகம் சமுர்த்தி வங்கிப் பிரிவின் ஏழாலை கிழக்கு மற்றும் ஏழாலை தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தனிமைப் படுத்தப்பட்ட குடும்பங்களில் சமுர்த்தி முத்திரை பெறும் பயனாளிகளுக்கு இரண்டு மாதங்களுக்கான பணக் கொடுப்பனவுகளை அவர்களின் இருப்பிடங்களுக்கு நேரடியாகச் சென்று வழங்கி வைத்தனர். (த-39)

# கருணாவை கைதுசெய்க

## ராவணாபலய கோரிக்கை

கொழும்பு, ஜூன் 22

கருணா அம்மான் முன்வைத்துள்ள கருத்துக்கள் பாரதூரமானவை. இரண்டாயிரம் தொடக்கம் மூவாயிரம் சிப்பாய்களைக் கொன்றோம் என்று கூறுவது நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டத்துக்குமுரணானதாகும். எனவே அவரை மனித கொலையுடன் தொடர்புபட்ட சட்டத்தின் கீழ் கைதுசெய்ய வேண்டும் என்று ராவணா பலய அமைப்பின் தலைவர் இத்தேகந்த சுததிஸ்ஸ தேரர் வலியுறுத்தினார்.

நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை விடவும் இது மிகப் பாரதூரமானதாகும். இந்தச் சம்பவம் மாத்திரமின்றி இதே போன்று இவர் இன்னும் பல மனிதப்படுகொலைகளுடன் தொடர்புபட்டவராவார். எனவே தற்போது அவருக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும். தான் செய்த குற்றத்தை அவரே ஒத்துக் கொண்டுள்ளார். சஹ்ரானைப் போன்றே இவரும் மனிதப் படுகொலையைச் செய்துள்ளார்.

தேர்தல் களத்தில் இருந்து கொண்டு இவ்வாறான கருத்தினை பகிரங்கமாகத் தெரிவிப்பதன் மூலம் மீண்டும் தனி ஈழ கோரிக்கையை முன்வைக்கின்றாரா என்ற சந்தேகம் எழுகின்றது. எனவே ஜனாதிபதி உள்ளிட்ட உயர் அதிகாரிகளிடம் உரிய நடவடிக்கையை துரிதமாக முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம் - என்றார். (ம)

# புடைவை விற்பனை நிலையம் அமைக்கும் முயற்சி நிறுத்தம்

வவுனியா , ஜூன் 22

வவுனியா மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகிலுள்ள நகரசபைக்குச் சொந்தமான பகுதியில் ஆடைத் தொழிற்சாலை ஒன்றினால் புடைவை விற்பனை வியாபார நிலையம் அமைப்பதற்கான முயற்சி நிறுத்தப்பட்டுள்ளது.

தென்பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றினால் புடைவை விற்பனை வியாபாரம் மேற்கொள்வதற்கு மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகே காணப்படும் நகரசபையினருக்குச் சொந்தமான பகுதி ஒன்றில் தற்காலிக விற்பனை நிலையம் அமைத்து புடைவை வியாபாரம் மேற்கொள்வதற்கு நகரசபையினரிடம் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

இதை அறிந்த நகரிலுள்ள புடைவை வியாபாரம் மேற்கொள்ளும் உரிமையாளர்கள் வவுனியா வர்த்தக சங்கத்தினரிடம் இந்த நடவடிக்கையை தடுத்து நிறுத்துமாறு முறையிட்டுள்ளனர். வர்த்தக சங்கம் எழுத்து மூலமான முறைப்பாடுகளை வர்த்தகர்களிடம் பெற்றுக்கொண்டமையுடன், குறித்த வியாபாரம் மேற்கொள்ளும் நடவடிக்கையையும் தடுத்து நிறுத்தியுள்ளது. (ப-110)

## ஐஸ்கிறீம் விற்றவருக்கு தண்டம்

தென்மராட்சி, ஜூன் 22
உரிய மருத்துவச் சான்றிதழ் இன்றி ஐஸ்கிறீம் வியாபாரத்தில் ஈடுபட்டவருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தால் 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அத்துடன் மருத்துவச் சான்றிதழைப் பெற்று நீதிமன்றில் சமர்ப்பிக்கும் வரை ஐஸ்கிறீம் உற்பத்திக்கும் விற்பனைக்கும் தடை விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் மருத்துவச் சான்றிதழ் இன்றி நடமாடும் ஐஸ்கிறீம் வியாபாரத்தில் ஈடுபட்டவருக்கு எதிராகப் பருத்தித்துறை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்டால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது. குற்றம் வியாபாரியால் ஏற்றுக்கொள்ளப்பட்டதை அடுத்து அவருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. உரிய சான்றிதழை நீதிமன்றில் சமர்ப்பிக்கும் வரை ஐஸ்கிறீம் உற்பத்திக்கும் விற்பனைக்கும் தடைவிதிக்கப்பட்டது. (ம-9)

## தலைவர் தேர்தலில் சாலிய

கொழும்பு, ஜூன் 22
சட்டத்தரணிகள் சங்கத்தின் 2021 ஆம் ஆண்டு தலைவர் தெரிவுக்கான தேர்தலில் ஜனாதிபதி சட்டத்தரணியும், காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தின் தவிசாளருமான சாலிய பீரிஸ் போட்டியிடவுள்ளார்.

2015 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நான் சட்டத்தரணிகள் சங்கத்தின் உப தலைவராக செயற்பட்டேன். அந்தக் காலப்பகுதியில் சட்டத்தரணிகள் சங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கும், தொழில்முறையில் கனிஷ்ட உறுப்பினர்களுக்கு உதவுவதற்கும் எனக்குக் கிடைத்த வாய்ப்பு தொடர்பில் பெருமிதமடைகின்றேன்.

இன்னும் சில மாதங்களில் நான் உங்கள் மத்தியில் வருவதுடன், உங்கள் கருத்துக்களைச் செவிமடுப்பதற்கும் தயாராக இருக்கிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-ரி1)



# உறவைத் தேடி ஓய்ந்த தாய்!

### போராட்டத்தின் போது மயக்கம்


முல்லைத்தீவு, ஜூன் 22
**இறுதிப் போர்க்காலத்தில் காணாமல் ஆக்கப்பட்ட தனது உறவுவுகளை மீட்டுத் தருமாறு தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த தாய் ஒருவர் நேற்றுமுன்தினம் கதறி அழுதபடியே மயங்கி வீழ்ந்துள்ளார். அங்கிருந்தவர்கள் அதனால் பதற்றமடைந்தனர்.**

முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது தொடர் போராட்டத்தின் ஆயிரத்து 200ஆவது நாளான நேற்றுமுன்தினம் கவனயீர்ப்பு நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்திருந்தனர். தனது ஐந்து உறவுகளைத் தொலைத்த முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியைச்சேர்ந்த தங்கவேல் சத்தியதேவி என்னும் தாயாரும் அதில் கலந்துகொண்டார்.

போராட்டத்தின் முடிவில் அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார். உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டதை தாங்கிக்கொள்ள முடியாது அவர் கதறி அழுது மயக்கமடைந்தார். தங்கவேல் சத்தியதேவி கடந்த இறுதிப் போர்க்காலப்பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தனது ஐந்து உறவினர்களைத் தேடி வருகின்றார். மருமகன் சின்னத்தம்பி மகாலிங்கம், மகள் சிவாஜினி, பேரப் பிள்ளைகளான மகிழினி, தமிழ்ஒளி, எழிலினி ஆகியோரை 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி வட்டுவாகலில் வைத்து இராணுவத்திடம் கையளித்ததாகவும், அதன் பின்னர் அவர்களைக் காணவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ப-246)

# கோழி இறைச்சி விற்பனை மன்னாரில் முடக்கப்பட்டது

### கட்டுப்பாட்டு விலையை அதிகரிக்கக் கோரி போராட்டம்



மன்னார், ஜூன் 22
கோழி இறைச்சிக்கான அதிகூடிய கட்டுப்பாட்டு விற்பனை விலையை அதிகரிக்க கோரி, மன்னார் மாவட்ட கோழி விற்பனை உரிமையாளர்கள் இறைச்சி மற்றும் கோழி விற்பனையைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளனர்.

தோலுடனான கோழி ஒரு கிலோ430 ரூபா, உரித்த கோழி 500 ரூபா என வர்த்தமானி அறிவித்தல் ஊடாக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறித்த விலைக்கு விற்பனை செய்தால் அதிக அளவு நஷ்டத்துக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்படும். எனவே நிர்ணய விலையை அதிகரிக்க வேண்டும் என்று மன்னார் கோழி இறைச்சி விற்பனையாள்ர்கள் வியாபார நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த சில மாதங்களாக கோழிப் பண்ணை உரிமையாளர்கள் கோழிகளின் விற்பனை விலைகளை அதிகரித்துள்ளனர். கோழி விலை மற்றும் போக்குவரத்து செலவீனம், கோழி தீவனம், உட்பட அனைத்தையும் உள்ளடக்கியே தற்காலிகமாக தாங்கள் விலைகளை அதிகரித்ததாகவியாபாரிகள் தெரிவித்தனர்.

மொத்த விற்பனையில் ஈடுபடும் பண்ணைகள் விலைகளைக் குறைத்தால் மாத்திரமே சில்லறை வியாபாரிகளாகிய நாங்கள் கோழியின் விலையைக் குறைத்து விற்பனை செய்ய முடியும். இந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து சிறிய அளவிலாவது இலாபம் அடையக்கூடிய விலையையாவது அரசு நிர்ணயிக்க வேண்டும் என கோழி விற்பனையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை புதிய விலைக்கு விற்பனைசெய்யாத வியாபாரிகளுக்கு எதிராக மன்னார் நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (க-56)

# கோத்தாவிடம் ரூ.5 ஆயிரம் நேரில் கொடுத்த முதியவர்

கொழும்பு, ஜூன் 22
கொவிட் 19 நிதியத்துக்காக 5 ஆயிரம் ரூபாவை தபால் மூலம் அனுப்பியிருந்த முதியவருக்கு, ஜனாதிபதியைச் சந்திக்க வாய்ப்பளிக்கப்பட்டு அவர் தனது கையால் 5 ஆயிரம் ரூபாவை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளார்.



மெதிரிகிரியவைச் சேர்ந்த முன்னாள் கிராம சங்க உறுப்பினர் எஸ்.பி. ஹேவாஹெட்ட (வயது - 86) அண்மையில் அலரிமாளிகைக்கு 5 ஆயிரம் ரூபா பணத்தாள் சகிதம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கைகளுக்குக் கிடைக்கும் வகையில் குறித்த பணமும் கடிதமும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பணம், மகிந்த ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் முதியவரின் கைகளாலேயே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஒரு மூத்த குடிமகனாக சமூகப் பொறுப்பை ஏற்று குறித்த பணத்தை அனுப்பிவைத்த ஹேவாஹெட்டவின் தாராள மனப்பான்மையை கௌரவிக்க வேண்டுமெனக் கருதிய பிரதமர், ஹேவாஹெட்டவின் கைகளாலேயே அதனை ஜனாதிபதியிடம் கையளிக்க ஏற்பாடு செய்யுமாறு பிரதமரின் செயலாளர் காமினி செனரத்துக்கு அறிவுறுத்தினார். அதன் அடிப்படையில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் பிறந்த நாளான நேற்று மிரிசவெட்டிய புனித பூமியில் இடம்பெற்ற தானம் வழங்கும் நிகழ்வின் போது, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் முன்னிலையில், ஹேவாஹெட்ட குறித்த நிதியை கொவிட் 19 நிதியத்துக்காக ஜனாதிபதியிடம் கையளித்தார். (ப)

## மன்னாரில் ரெலோ மக்கள் சந்திப்பு

மன்னார், ஜூன் 22
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான ரெலோ நாடாளுமன்றத் தேர்தலுக்கான மக்கள் சந்திப்பு ஒன்றை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை மன்னாரில் ஏற்பாடு செய்திருந்தது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் ஏ.ரி.லுஸ்ரின் மோகன்ராஜ் தலைமையில் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோநோகராதலிங்கம், கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (ப-56)

# இரு வாரங்களில் 25,912 கைதுகள்

கொழும்பு, ஜூன் 22
நாடளாவிய ரீதியில் கடந்த இரு வாரங்களாகப் பொலிஸார் முன்னெடுத்த விசேட சோதனை நடவடிக்கைகளின் போது பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் 25 ஆயிரத்து 912 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாதம் 6ஆம் திகதி காலை 6 மணிமுதல் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு 12 மணிவரை முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பின்போதே இந்தச் சந்தேக நபர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளதாவது, கடந்த இரு வாரங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்களின்போது போதைப் பொருளுடன் 6 ஆயிரத்து 420 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுள் 3 ஆயிரத்து 551 பேரிடமிருந்து 5 கிலோ 472 கிராம் 941 மில்லி கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது. 2 ஆயிரத்து 609 பேர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளதோடு இவர்களிடமிருந்து 217 கிலோ 474 கிராம் 883 மில்லிகிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதேவேளை ஐஸ் போதைப் பொருளுடனும் 260 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 758 கிராம் 936 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. சட்டவிரோத மது வகைகளை வைத்திருத்தமை, ஆயுதங்களை வைத்திருந்தமை தொடர்பிலும் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம)

# போதைப் பொருள்களுடன் ஐவர் கைது



யாழ்ப்பாண் நகரில் ஹெரோய்ன் மற்றும் கஞ்சா போதைப்பொருள்களை வைத்திருந்தனர் என்ற குற்றச் சாட்டில் ஐவர் நேற்றுமுன்தினம் மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை குருநகர் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கஞ்சா போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (து-159)

# காத்தான்குடி பொலிஸாரின் கவனவீனத்தால் கைதிலிருந்து தப்பினர் ஸஹ்ரான், ரில்வான்

கொழும்பு, ஜூன் 22

**பிரிவினைவாதக் தாக்குதல்கள் தொடர்பில் ஸஹ்ரான் ஹசீம் அவருடைய சகோதரர் மொஹமட் ரில்வான் உள்ளிட்ட நால்வரையும் பிடியாணையின்றி கைது செய்வதற்கான இயலுமை காணப்பட்டபோதும் காத்தான்குடி பொலிஸ் நிலைய அதிகாரிகளின் கவனயீனத்தால் அது தவறவிடப்பட்டது என்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் தெரியவந்துள்ளது.**

காத்தான்குடி பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி நேற்றுமுன்தினம் ஆணைக்குழுவில் சாட்சியம் வழங்கியபோதே இந்த விடயம் தெரியவந்தது. அவர் தனது சாட்சியத்தில் 2017ஆம் ஆண்டு மார்ச் 10ஆம் திகதியன்று கத்தான்குடி அல்லியார் சந்திப்பில் ஸஹ்ரான் ஹசிம் மற்றும் ரவூப் மௌலவி உள்ளிட்ட தவ்ஹீத் ஜமாத் மற்றும் சுன்னத்துல் வால் ஜமாஅத் ஆகிய அமைப்புகளுக்கு இடையில் மோதல் இடம்பெற்றதாகவும் வாள்கள் மற்றும் பெற்றோல் குண்டைப் பயன்படுத்தி இந்த மோதல் இடம்பெற்றதாகவும் மோதலுக்கு பின்னர் சஹ்ரான் ஹசீம், மொஹமட் ரில்வான் ஆமீ மொஹமட், மற்றும் யூசுப் அன்னவர் ஆகியோர் தப்பியோடியதாகவும் அவர் தெரிவித்தார்.

தான் கடமையைப் பொறுப்பேற்கும் போதும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு இடம் பெற்றதாகவும் பிரதேசத்தில் இருந்து தப்பியோடிய ஸஹ்ரான் ஹசீம் உள்ளிட்டவர்கள் அதுவரை கைது செய்யப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

இதன்போது ஆணைக்குழு அதிகாரிகள் அவர்களை கைது செய்ய ஏன் பிடியாணை உத்தரவை பெற்றுகொள்ளவில்லை என வினவினர். அதற்கு பதிலளித்த அவர், சம்பவம் தொடர்பாக அரச இரசாயனப் பகுப்பாய்வாளரின் அறிக்கை கிடைக்காமையால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்படும் வரை சந்தேக நபர்களைக் கைது செய்ய முடியவில்லை எனக் கூறினார்.

இது குறித்து இரசாயனப் பகுப்பாய்வாளருக்குஅறிவிக்கப்பட்டதா?எனஆணைக்குழு வினவியதற்கு அது தொடர்பில் தனக்கு ஞாபகம் இல்லை என அவர் பதிலளித்தார்.

இதன்போது நீதிமன்ற அறிக்கையை ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழு, சம்பவம் குறித்த இரசாயனப் பகுப்பாய்வாளரின் அறிக்கை 2018ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் திகதியன்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் வழங்கப்பட்டமை குறித்து அறிந்திருக்கவில்லையா? என வினவினர்.

இதற்கு பதிலளித்த அவர், அது குறித்து தனக்கு தெரியாது எனவும், அதனால் எந்தவித பிடியாணையும் பிறப்பிக்கப்படவில்லை எனவும் கூறினார். இதன்போது பதி லளித்த ஆணைக்குழு அதிகாரிகள் இர சாயனப் பகுப்பாய்வாளரின் பி அறிக்கையில்ஸஹ்ரான் மற்றும் ஏனையோரைக் கைது செய்ய போதுமான விடயங்கள் உள்ளடங்கியிருப்பதாக சுட்டிக்காட்டியது. (ம)

# கருணா போன்றோரிடம் அவதானமாக இருங்கள்

## ருவன் விஜேவர்தன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 22
மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக கருணா அம்மான் தெற்கிலும், வடக்கு மற்றும் கிழக்கிலும் வெவ்வேறு மாதிரியாக கருத்துக்களைக் கூறிவருகின்றார். இவர் போன்ற சந்தப்பவாதிகளிடம் மக்கள் மிகமிக அவதானமாக இருக்க வேண்டும் இவ்வாறு முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலருமான ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவளிக்கும் வகையில் களமிறங்கியுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் தலைவரான விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணா அம்மான் தெரிவித்துள்ள கருத்துக்கள் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பரவலாகப் பேசப்படுகின்றன. ஒரே நாளில் ஆனை யிறவில் வைத்து 2 ஆயிரம் தொடக்கம் 3 ஆயிரம் இராணுவத்தினரைக் கொன்றோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இவரால் முன்வைக்கப்பட்டுள்ள இந்த கருத்துக்கள் நாட்டின் சட்டக் கட்டமைப்பிற்குப் பெரும் சவாலை ஏற்படுத்தியுள்ளது. அனைத்து சந்தர்ப்பங்களிலும் தேசப்பற்று என்பதைப்பற்றி தெற்கிற்கு செல்லும்போது பேசுபவர், வடக்கு - கிழக்குக்குச் சென்று ஆயிரக்கணக்கான சிப்பாய்களைக் கொன்றதாகக் கூறி மக்களிடம் வாக்குகளைப் பெற முயற்சிப்பது கவலைக்குரியது. கருணா போன்றவர்களிடம் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் - என்றார். (ம)

# தமிழர் மீதான அடக்குமுறையே தேர்தல் அறுவடைக்கான ஆயுதம்

## அரசின் தந்திரம் இதுவென சிவமோகன் காட்டம்

முல்லைத்தீவு, ஜூன் 22
எப்பொழுதும், எந்தக் காலங்களிலும், தமிழர்களை எந்தவொரு சிங்கள அரசு அடக்கியாள முற்படுகின்றதோ அவர்களைத்தான் சிங்கள மக்கள்தெரிவுசெய்துகொண்டிருக்கின்றார்கள். அதற்கு கோத்தாபய அரசும் விதிவிலக்கல்ல. எனவேதான் கோத்தாபய அரசும் தமிழர்கள்மீதான அடக்குமுறையை தன்னுடைய தேர்தல்கால அறுவடைக்கான ஆயுதமாகப் பாவித்துக்கொண்டிருக்கின்றது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
தமிழர்களின் ஒற்றுமையைக் குலைத்துவிட்டால் தமிழர்களுடன் எதுவும் பேசத் தேவையில்லை எனப் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள கோத்தாபயவை ஜனாதிபதியாகக் கொண்டுள்ள இந்த அரசு எண்ணிக்கொண்டிருக்கின்றது. ஐ.நா சபையில் அவர்கள் வழங்கிய வாக்குறுதியிலிருந்து, அவர்கள் தற்போது பின்வாங்கிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் நிச்சயமாக பின்வாங்குதல் என்ற அந்த அறிக்கை கூடத் தேர்தலுக்காக அவர்கள் பயன்படுத்திய ஒன்றாகவே இருக்கும். ஐ.நா சபையில் வழங்கப்பட்ட வாக்குறுதியிலிருந்து ஒரு அரசு, அல்லது ஒரு நாடு பின் பின்வாங்குதல் என்பது சாத்தியப்படாத ஒன்றாகும். மீள் நிகழாமையினை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

இங்கு நடந்த அநியாயங்கள் விசாரிக்கப்பட்டு அதற்கு நீதி வழங்க வேண்டும் என்பதனையும் ஏற்றுக் கொண்டு இருக்கின்றார்கள். எனவே இவ் விடயங்களெல்லாம் இருக்கும்போது, தமிழர்களுடைய ஈழவிடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின், நாம் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அதை முன்னெடுத்துச் செல்கின்றோம். அதை உருக்குலைக்கும் முகமாக 32 சுயேச்சைகள் இன்னும் பல பல கட்சிகள் சேர்ந்து ஒட்டுமொத்தமாக 477 பேர் வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டிக்காக களமிறங்கியிருக்கின்றார்கள். அதன் தாற்பரியம் எமது மக்களுக்குப் புரியும். எனவே எமது தமிழர்களின் ஒற்றுமையை நாங்கள் நிலைநிறுத்த வில்லையென்றால் மீண்டும் எமது காணிகளையும், பிள்ளைகளையும் பறிகொடுத்து நாம் ஓர் இக்கட்டான சூழலுக்குத் தள்ளப்படவேண்டியவர்களாக இருப்போம் என்பதுதான் நிதர்சனமான உண்மை- என்றார். (பு-246)

# கல்வி நிறுவனங்களை திறப்பது தொடர்பில் சிறப்புக் கருத்தமர்வு



தென்மராட்சி, ஜூன் 22
பருத்தித்துறை பிரதேச தனியார் கல்வி நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு தனியார் கல்வி நிலையங்களை சுகாதாரப்பாதுகாப்புடன் மீள ஆரம்பிப்பது தொடர்பான கருத்தமர்வு நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நகரசபை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

சுமார் 45 தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். கொரோனாப் பெருந்தொற்றைக் கருத்தில்கொண்டு உரிய நடவடிக்கைகளைப் பேணி இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. (ம-9)

# கைதடி கயற்றசிட்டி கந்தனுக்கு வெள்ளியன்று கொடி

கொடிகாமம், ஜூன் 22
கைதடி வடக்கு கயிற்ற சிட்டி கந்தசுவாமி கோவில் மஹோற்சவ திருவிழா எதிர்வரும் வெள்ளிக் கிழமை கொடியேற்றத்து டன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெற வுள்ளது.

தினமும் காலை 8 மணிக் கும் மாலை 4 மணிக்கும் பூசைகள் ஆரம்பமாகும். எதிர்வரும் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டை திருவிழாவும் 4ஆம் திகதி சனிக்கி ழமை தேர்த் திருவிழா வும் 5ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை தீர்த்த திரு விழாவும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. (கு-159)

# சைக்கிளும் அலைபேசியும் திருட்டு:

யாழ்ப்பாணம், ஜூன் 22
யாழ்ப்பாணம் நல்லூ ரில் பெறுமதியான சைக் கிள் ஒன்றும் அலை பேசியும் திருடப்பட்டுள் ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

வயதில் குறைவான இரு வர் வீடு புகுந்து அவற் றைத் திருடிச் செல்கின் றமை சிசிரிவி கமராவில் பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில நாள்களுக்கு முன் னர் இடம்பெற்ற இந்தத் திருட்டு தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படு கின்றது. (கு-50)

# செயலகத்தில் துப்புரவுப் பணி

ஏழாலை, ஜூன் 22
சர்வதேச சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு உடுவில் பிரதேச செய லக வளாகம் கடந்த வெள்ளிக்கிழமை துப்பு ரவு செய்யப்பட்டது.

பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமை யில் அலுவலர்கள் துப் புரவில் ஈடுபட்டனர்.

வளாகம் பல பகுதிக ளாக அறிவிக்கப்பட்டு செயலகத்தின் ஒவ் வொரு வேலைப் பிரிவி னருக்கும் இடங்கள் ஒதுக்கப்பட்டு துப்புரவுப் பணி நடைபெற்றது. (கு)

## முகவரிகள் அழிந்த பொதிகளின்

# விவரங்களை வழங்க மலேசியா இணக்கம்

**கொழும்பு, ஜூன் 22**
**கடல் மார்க்கமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ள முகவரிகள் அழிந்துள்ள பொதிகள் தொடர்பான தகவல் களை வழங்குவதற்கு மலேசியா இணக்கம் தெரிவித்துள்ளது.**

பொதிகள் குறித்த ஏனைய தகவல் களை மலேஷியாவுக்கு அனுப்புவதற் கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள் ளது என்று தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

கடல் மார்க்கமாக நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள 45 ஆயிரம் பொதிகளில் 37 ஆயிரத்துக்கும் அதிகமான பொதி களில் முகவரிகள் அழிந்துள்ளன.

மலேசியா ஊடாக குறித்த பொதிகள் தொடர்பான முகவரிகள் கிடைத்ததன் பின்னர், அதன் உரிமையாளர்களிடம் அவற்றைக் கையளிப்பதற்கான நடவ டிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (சு)

# தமிழர்களுடைய காணிகளை அபகரித்து தோட்டச் செய்கை

## ரவிகரன் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜூன் 22
முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய்த் தமிழ்க் கிராமங்களை அண்மித்து சிங் கள குடியேற்றங்கள் நகர்ந்துள்ளதைத் தொடர்ந்து அங்குள்ள தமிழ் மக்களு டைய காணிகளை அபகரித்து தோட்டச் செய்கையும் முன்னெடுக்கப்பட்டு ள்ளது என்று வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் து. ரவிகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில், கோட்டைக்கேணி தொடக்கம் அம்பட்டன் வாய்க்கால், தொட்டகண்டல் குளம் ஆகிய பகுதிகளில் ஒரு பகுதியாக வன ஜீவராசிகள் திணைக்களமும், மறுபகுதி யில் வனவளத் திணைக்களமும் காணி களை அபகரித்துள்ளது. நிமால் சிறீ பாலடி சில்வா அமைச்சராக இருந்த காலத்தில் தொட்டகண்டல் குளப் பகுதி யிலுள்ள 825 ஏக்கர் காணிகள், 33 சிங்கள பயனாளிகளுக்கு, ஒருவருக்கு தலா 25ஏக்கர் வீதம் பகிர்ந்தளிக்கப்பட் டிருந்தது. நிமால் சிறீபாலடிசில்வாவின் நெருங்கிய சகாக்களுக்கு இவ்வாறு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக் கின்றன என்று சிங்களப் பத்திரிக்கை ஒன்றும் செய்தி வெளியிட்டிருந்தது.

அதேவேளை இவ்வாறு சிங்களப் பய னாளிகளுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப் பட்ட குறித்த தொட்டகண்டல் குளம் என்னும் இடத்தில் தற்போது பெரிய பங்களா ஒன்று கட்டி எழுப்பப்பட்டிருக் கின்றது. அத்தோடு காணியைச் சுற்றி லும் இரகசியக் கமராக்கள் பொருத்தப் பட்டு, அக்காணிகளுக்குள் தென்னை கள், மற்றும் வாழை, மா உள்ளடங் லாக அவர்கள் தோட்டச் செய்கையில் ஈடுபடுவதனை காணக்கூடியதாக இருக் கின்றது. கிட்டத்தட்ட 1956ஆம் ஆண்டு தொடக்கம் 1984ஆம் ஆண்டு வரையில் எங்களுடைய தமிழ் மக்கள் குறித்த காணி களில் பயிர்ச்செய்கை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அதன் பிற்பாடு 1984 ஆம் ஆண்டு அப்பகுதியிலிருந்து எமது தமிழ் மக்களை வெளியேற்றிவிட்டு இக் காணிகளை அபகரித்துள்ளனர். தற் போது அக் காணிகள் சிங்கள மக்களுக் குப் பகிர்ந்தளிக்கப்பட்ட நிலையில் அவர்களால் அங்கு தோட்டச் செய்கை இடம்பெறுகின்றது - என்றார். (ப)



# சுற்றுச்சூழலை காக்க சைக்கிள் ஓடும் நபர்

யாழ்ப்பாணம், ஜூன் 22
'சேவ் த க்ளோவ் பை சைகிளிங்' எனும் தொனிப் பொருளில் சுற்றுச்சூழலை காப்பாற்றும் நோக்கில் ஆர்.ஆர். குணசேகர என்ற நபர் சைக்கிள் ஓடி இலங்கையில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

அவருடைய சைக்கிள் ஓட்டம் யாழ்ப்பாணம் நல் லூர் சிவன் அம்மன் கோவிலிலிருந்து நேற்று முற்பகல் 10.30 அளவில் ஆரம்பித்து நல்லூர் கோவிலில் வழிபாடு செய்து ஏ-9 வீதி வழியாக புறப்பட்டார் அவர். ஒவ்வொரு மாவட்டத்தையும் சென்றடையவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஒரு பில்லியன் மரநடுகை திட்டத்தில், 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டத்தில், இவர் ஒவ்வொரு மாவட்டத்துக்கும்சென்று அங்கு மரங் களை நட்டு மக்கள் மத்தியில் சுற்றாடல் தொடர் பான விழிப்புணர்வை ஏற்படுத்த முன்வந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது நிலவும் கொவிட் 19 வைரஸ் தொற்றிலி ருந்து மக்களை பாதுகாப்பதற்கான முயற்சியாக, வேப்ப மரங்களை நடும் திட்டத்தை ஆரம்பித் துள்ளார்.

இவரின் இந்த முயற்சிக்கு பொதுமக்களின் ஆத ரவை வழங்க வேண்டுமென்பதுடன், தற்போது நிலவும் கொவிட் 19 வைரஸ் பிரச்சினையிலிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்வதற்கான ஒரு முயற் சியாக இந்த விழிப்புணர்வு செயற்பாட்டை அவர் முன்னெடுத்துள்ளார்.

இவ்வாறான ஒரு செயற்பாட்டை அனைவரும் முன்னெடுக்க வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (கு-106)

# கைதடி இனுங்கித்தோட்ட இலட்சார்ச்சனை ஆரம்பம்

கைதடி இனுங்கித்தோட்டம் கந்தசுவாமி கோவில் வருடாந்த இலட் சார்ச்சனை கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து நடைபெற்றுவருகின் றது. எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இலட்சார்ச்சனை நிறைவுற்று மறுநாள் புதன்கிழமை சங்காபிஷேகம் நடைபெறும். அன்று மாலை திருக்கல்யாணமும் நடைபெறும். (கு)



## ஒரு மாதத்தில்

# விபத்துக்களால் 337 பேர் யாழ்.போதனாவில் அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 22
யாழ்.மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 337 பேர் வீதி விபத்து, தீ விபத்து உள்ளிட்ட பல்வேறு விபத்துக்களுக்கு உள்ளா கியுள்ளனர் என்று யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத் தியமூர்த்தி தெரிவித்தார்.

கடந்த மே மாதத்தில் மட்டும் வீதி விபத்தில் 212 பேரும், ஏனைய விபத்துகளில் 118 பேரும், தீ விபத்தில் 7 பேரும் பாதிக்கப்பட்ட நிலை யில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் வீதி விபத்துக்கு உள்ளான நிலையில் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 3 பேர் உயிரிழந்துள் ளனர். மேலும் கடந்த 8ஆம் திகதியில் இருந்து 14 ஆம் திகதி வரையில் வீதி விபத்தில் 43 பேரும், ஏனைய விபத்துகளில் 6 பேரும் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டனர். இவர்களில் வீதி விபத்தில் காயமடைந்த இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்துள் ளார். (ப-2

## ஏழாலையிலுள்ள கர்ப்பிணிகளுக்கு வேலைத்திட்டம்

ஏழாலை, ஜூன் 22

ஏழாலையிலுள்ள ஆறு கிராம அலுவலர் பிரிவுகளில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்களில் தெரிவுசெய்யப்பட்ட 25 கர்ப்பிணிகளுக்கு 10 மாதங்களுக்கு உதவியளிக்கும் வேலைத் திட்டம் ஒன்றை ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பினர் முன்னெடுத்திருக்கிறார்கள்.

ஜே/201 ஏழாலை மேற்கு, ஜே/204 ஏழாலை கிழக்கு, ஜே/ 205 ஏழாலை வடக்கு, ஜே/206 ஏழாலை மத்தி, ஜே/203 ஏழாலை தெற்கு, ஜே/202 ஏழாலை தென் மேற்கு ஆகிய ஆறு கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட 25 கர்ப்பிணிகளுக்கே மாதாந்தம் தலா ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்வனவு செய்வதற்கான வவுச்சர்களை வழங்கி வருகின்றனர்.

அவர்கள் இத்தத் திட்டத்தைக் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து செயற்படுத்திவருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த அமைப்பினர் கொரோனா வைரஸ் தாக்க காலத்தில் 5 கட்டங்களாக நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (து-39)



## மீண்டும் எகிறுகின்றது முருங்கைக்காய் விலை!

கரணவாய், ஜூன் 22

கடந்தவாரம் கிலோ 150 ரூபா முதல் 200 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட முருங்கைக்காய் தற்போது 400 ரூபா முதல் 500 வரை விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் வீசிய கடுங்காற்றினால் பல முருங்கைத் தோட்டங்கள் சேதமடைந்தன. அத்தோடு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலை வழமைக்குத் திரும்பியதையடுத்து தென்பகுதிக்கு முருங்கைக் காய் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இவற்றினாலேயே இதன் விலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் நெல்லியடி, கரணவாய் மற்றும் உடுப்பிட்டி ஆகிய மரக்கறிச் சந்தைகளில் ஒருகிலோ முருங்கைகக்காய் 400 ரூபா முதல் 500 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டமையை அவதானிக்க முடிந்தது. (ஐ-108)

# கழிவு கொட்ட வந்தவர் பி.எச்.ஐ. மீது தாக்குதல்

*யாழ்ப்பாணத்தில் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஜூன் 22

**கழிவுப் பொருள்களைக் கொட்டுவதற்கு வந்தவரை பொதுச் சுகாதார பரிசோதகர் தடுக்க முற்பட்டதனால் அவரைக் குப்பை கொட்ட வந்தவர் தாக்கிவிட்டுத் தப்பிச்சென்றுள்ளார்.**

இந்தச் சம்பவம் யாழ்ப்பாண நகர் ஸ்ரான்லி வீதி அத்தியடிச் சந்தியில் நேற்று அதிகாலை 4.40 மணியளவில் இடம்பெற்றது.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. தாக்குதலில் காயமடைந்த பொதுச் சுகாதார பரிசோதகர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

குறித்த பகுதியில் குப்பை அதிகளவில் கொட்டப்படுவதால் அதற்கு அண்மித்த இடங்களில் உள்ளவர்கள் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இந்தநிலையில் அந்த இடத்தில் குப்பை போட வேண்டாம் என்று யாழ்ப்பாண மாநகர சபை அறிவித்தல் பலகை வைத்துள்ளது. எனினும், அதை கவனத்திற்கொள்ளாது, அறிவுறுத்தலை மீறி பலரும் அந்த இடத்தில் தினமும் குப்பை கொட்டுகின்றனர்.

இத்தகைய அறிவுறுத்தலையும் மீறி குப்பை கொட்டுபவர்கள் சிலர் இனங்காணப்பட்டு அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யும் நடவடிக்கையை அந்தப் பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் மேற்கொண்டு வருகின்றார்.

இதுவரையில் 70க்கும் மேற்பட்டவர்கள் மீது வழக்கு பதிவுசெய்துள்ளார்.

இந்தநிலையில் நேற்றுஅதிகாலை 6332 என்ற இலக்க மோட்டார் சைக்கிளில் வந்தவர் அங்கு குப்பைகளை கொட்டியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரே தாக்கிவிட்டுத் தப்பியோடியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (து-20)

## தேர்தல் முறைப்பாடுகளை தெரிவிக்க இலக்கங்கள்

முல்லைத்தீவு, ஜூன் 22

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேர்தல் தொடர்பிலான முறைப்பாடுகளைத் தெரிவிக்க மாவட்டத் தேர்தல் திணைக்களத்தில் முறைப்பாட்டு முகாமைத்துவப் பிரிவு செயற்படத் தொடங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தேர்தல் தொடர்பிலான முறைப்பாடுகளை 021 320 4352, 021 290 033 மற்றும் தொலைநகல் 021 229 0037 ஆகிய இலக்கங்கள் ஊடாக முறையிடலாம் என்று மாவட்ட தேர்த்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (து-19)

## முல்லை. மாவட்டத்தில் 78,360 வாக்காளர்கள்

முல்லைத்தீவு, ஜூன் 22

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆறு பிரதேச செயலர் பிரிவுகளின் கீழ் 136 வாக்களிப்பு நிலையங்களில் 78 ஆயிரத்து 360 வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர் என்று மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் க.காந்தீபன் தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட வாக்காளர் விவரத்தின் படி மாந்தை கிழக்கு பிரதேசத்தில் 5ஆயிரத்து 555 வாக்காளர்களும், துணுக்காய் பிரிவில் 7ஆயிரத்து 639வாக்காளர்களும், புதுக்குடியிருப்பு பிரிவில் 24ஆயிரத்து 626 வாக்காளர்களும், கரைதுறைப்பற்று பிரிவில் 25ஆயிரத்து 167 வாக்காளர்களும், ஒட்டுசுட்டான் பிரிவில் 11ஆயிரத்து 935 வாக்காளர்களும், வெலிஓயா பிரிவில் 3ஆயிரத்து 438 வாக்காளர்களும் வாக்களிக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் 75 ஆயிரத்து 381 வாக்காளர்கள் காணப்பட்ட நிலையில் 2019 ஆம் ஆண்டு 78ஆயிரத்து 360 வாக்காளர்களாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-19)



## தீர்த்தத் திருவிழாவில் நூல் வெளியீடு

கொடிகாமம், ஜூன் 22

தென்மராட்சி மீசாலை வடக்கு இராமாவில் கந்தசுவாமி கோவில் தீர்த்தத் திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து எழுத்தாளரும் அதிபருமான திருச்செல்வம் தவரத்தினம் எழுதிய செந்தமிழ் முருகன் என்ற நூல் வெளியீட்டு விழா ஓய்வு பெற்ற அதிபர் லயன் செ. சுப்பிரமணியம் தலைமையில் நல்லூர் தவத்திரு வேலன் சுவாமிகள் திருமுன்னிலையில் நடைபெற்றது.

இராமாவில் கந்தசுவாமி கோவில் பொருளாளர் மா.சிவசுப்பிரமணியம் நூலை வெளியிட கந்தசாமி கோவில் தர்மகர்த்தா அருணாசலம் பாரத் முதல் பிரதியை பெற்றார். சிவசிறி ச.மகாலிங்கக் குருக்கள் ஆசியுரை வழங்க வரணியூர் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் வெளியீட்டுரை நிகழ்த்தினார். (து-159)

## தபால்மூல வாக்கு அட்டைகள் 30லிருந்து விநியோகிக்கப்படும்

*முல்லைத்தீவு தேர்தல் திணைக்களம் அறிவிப்பு*



முல்லைத்தீவு, ஜூன் 22

முல்லைத்தீவு மாவட்டத்தில் தபால்மூல வாக்கு அட்டைகள் தபால் நிலையத்துக்கு எடுத்துச் செல்லும் பணி எதிர்வரும் 30 ஆம் திகதி மற்றும் ஜூலை முதலாம் இரண்டாம் திகதிகளில் நடைபெறும் என்று முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வன்னித்தேர்தல் தொகுதியின் முல்லைத்தீவு மாவட்டத்தில் தேர்தல் நடத்த மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கென ஆரம்பகட்ட குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றின் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தபால்மூல வாக்களிப்புக்கு மாவட்டத்தில் 3ஆயிரத்து 508 வாக்குகளுக்கான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதில் 127 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 3ஆயிரத்து 381 வாக்குச் சீட்டுகள் எதிர்வரும் 30 ஆம் திகதியிலிருந்து மூன்று நாள்கள் தபால் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன என்று மாவட்ட தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (து-19)

## எரிவாயுவில் தீ பற்றி பொருள்கள் சில நாசம்

கிளிநொச்சி, ஜூன் 22

சிலிண்டர் எரிவாயுவில் தீ பற்றியதால் வீட்டிலிருந்த சில பொருள்கள் எரிந்தன. எனினும், பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதால் அவர்கள் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

சம்பவம் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உழவனூர் கிராமத்தில் நேற்றுமுன்தினம் மதியம் இடம்பெற்றுள்ளது.

சமையல் வேலைசெய்யவென்று அடுப்பை பற்ற வைக்க முயன்றபொழுது திடீரென்று தீ பற்றியது என்று தெரிவிக்கப்பட்டது.

தீ பற்றியதைக் கண்டதும் அந்த வீட்டிலிருந்த முதியவர் மயக்கமடைந்துவிட்டார் என்றும் எனினும், அவரும் அவருடைய மகனும் காப்பாற்றப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (து-113)

# 500 மருத்துவர்களுக்கும் நியமனம் வழங்கத் தடை

## நெருக்கடிக்குள்ளாகும் மருத்துவமனைகள் மருத்துவ சங்கம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூன் 22**

**உள்ளகப் பயிற்சி மருத்துவர்கள் 500 பேருக்கு வழங்கப்படவிருந்த நியமனத்தை சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு இடைநிறுத்தியுள்ளதால் நாட்டிலுள்ள பிரதான மருத்துவமனைகள் நேரடிச் சவால்களுக்கு முகங்கொடுப்பதைத் தவிர்க்க முடியாது.**

எனவே எவ்வித அரசியல் அழுத்தமும் இன்றி தகுதிகளை அடிப்படையாகக் கொண்ட இந்த நியமனங்களை வழங்குவதற்கு ஆணைக்குழு அனுமதியளிக்க வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவுக்கு அனுப்பிய கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உள்ளகப் பயிற்சிக்கான மருத்துவர்கள் தாம் பணியாற்றுகின்ற மருத்துவமனைகளில் 24 மணித்தியாலங்களும் சேவை புரிபவர்களாவர்.

அதற்கமைய நாட்டில் அனைத்து பிரதான மருத்துவமனைகளிலும் தொடர்ச்சியான சேவைக்காக உள்ளகபயிற்சிமருத்துவர்களின் சேவை அத்தியாவசியமானதாகும்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு கிடைக்கப்பெற்ற தகவலின்படி தற்போது தேவையான அனைத்து தகுதிகளையும் நிறைவுசெய்த உள்ளகப் பயிற்சி மருத்துவர்கள் 500 பேருக்கு நியமனம் வழங்குவதற்கு சுகாதார அமைச்சு அனைத்து நடவடிக்கைகளையும் நிறைவுசெய்துள்ளது.

ஆனால் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு தற்போது தேர்தல் காலம் என்பதால் அந்த நியமனங்களை இடைநிறுத்துமாறு ஆணைக்குழு சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

எந்தவித அரசியல் அழுத்தமும் இன்றி தகுதிகளை அடிப்படையாகக் கொண்டு தவிர்க்க முடியாத காரணத்தால் வழங்கப்படவிருந்த இந்த உள்ளக பயிற்சி மருத்துவர் நியமனத்தை இடைநிறுத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு எடுத்துள்ள தீர்மானத்தால் நாடு முழுவதுமுள்ள மருத்துவமனைகள் நேரடிச் சவாலுக்கு முகங்கொடுப்பதைத் தவிர்க்க முடியாது.

அத்தோடு மேற்கூறப்பட்டவாறு தேர்தல் நடைபெறவுள்ள காலமாக இருந்தாலும் எவ்வித அரசியல் அழுத்தமும் இன்றி தகுதிகளை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டே மருத்துவர் நியம னங்கள் வழங்கப்படும் என்பதை நினைவுபடுத்துகின்றோம்.

எனவே எம்மால் கூறப்பட்ட காரணிகளை கவனத்திற்கொண்டு தகுதிகளை நிறைவுசெய்துள்ள உள்ளகப் பயிற்சி மருத்துவர்களை நியமிப்பதற்கு சுகாதார அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க அனுமதியளிக்குமாறு கோருகின்றோம். என்று சங்கம் கோரியுள்ளது. (து)

# நிதி நிறுவன முறைகேடுகள் மக்கள் கருத்தறியத் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 22

நிதி நிறுவனங்கள் மற்றும் லீசிங் நிறுவனங்களில் இடம்பெறும் முறைகேடுகள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழு, பொதுமக்களின் கருத்துகளை கேட்டறியவுள்ளது.

பொதுமக்களின் கருத்துகள் மற்றும் முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன. இதைத்தவிர குழுவின் பிரதிநிதிகளை சந்திப்பதற்காக மேலதிகமாக 2 நாள்கள் வழங்கப்படவுள்ளன என்று ஜனாதிபதி செயலகத்தின் சட்டத்துறை ஆணையாளர் நாயகம், சட்டத்தரணி ஹரிகுப்த ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

மக்கள் இது தொடர்பான யோசனைகள், கருத்துகள் மற்றும் முறைப்பாடுகளை இலங்கை மத்திய வங்கி, கொழும்பு - 1 எனும் முகவரிக்கும் அனுப்பமுடியும். கருத்துகள் மற்றும் யோசனைகளை முன்வைப்பதற்கான மின்னஞ்சல் முகவரியொன்றையும் தொலைபேசி இலக்கமொன்றையும் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மத்திய வங்கியில் நாளை நடைபெறவுள்ள தமது குழுக்கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். நிதி மற்றும் லீசிங் நிறுவனங்களில் இடம்பெறும் முறைகேடுகள், சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்கு மூவரடங்கிய குழு அண்மையில் நியமிக்கப்பட்டது.

மத்திய வங்கியில் பதிவுசெய்துள்ள நிதி நிறுவனங்களில் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்களின்போது சமூகத்தினால் ஏற்றுக்கொள்ள முடியாத செயற்பாடுகள் மற்றும் அவற்றை முகாமைத்துவம் செய்வது எவ்வாறு என்பது தொடர்பிலும் இந்தக் குழு ஆராய்ந்து பரிந்துரை செய்யவுள்ளது. இந்தக் குழுவின் அறிக்கை 14 நாள்களுக்குள் சமர்ப்பிக்கப்படவேண்டும். (எ)

# பெரும்பான்மையைப் பெற ராஜபக்ஷவினர் பிரயத்தனம்

## முன்னாள் எம்.பி கருணாகரம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 22

மொட்டுக்கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினராக வந்தாலும், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினராக வந்தாலும் இறுதியாக அவர்கள் சேரும் இடம் ராஜபக்ஷ குடும்பமே என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் பொருளாளருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளராகப் போட்டியிடும் கோவிந்தன் கருணாகரம் தனது தேர்தல் அலுவலகத்தைத் திறந்துவைத்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மொட்டுக் கட்சியில் வந்தாலும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியில் வந்தாலும் அவர்கள் போய் சேருகின்ற இடம் ராஜபக்ஷ குடும்பத்தின் ஆட்சியில் இருக்கின்ற ஆட்சி அதிகாரத்திலாகும். தற்போதைய ஜனாதிபதியின் கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு மிகவும் பிரயத்தனம் செய்கின்றது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று இந்த நாட்டைக் கொடுங்கோல் ஆட்சிக்குள் கொண்டு செல்வதற்கு முனைகின்றனர். இதை நாங்கள் தடுக்க வேண்டும். நாங்கள் பேரம் பேசும் ஒரு சக்தியாக மாறினால் அவர்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறுவதற்கு எங்களுடன் பேரம் பேசலாம். மட்டக்களப்பில் நாங்கள் நான்கு உறுப்பினர்களை பெற்றுக்கொண்டோமானால் கிழக்கு மாகாணத்தில் ஆறு அல்லது அதற்கு மேலாக ஏழு ஆசனங்களைப் பெற்றால் வடக்கு கிழக்கிலே கிட்டத்தட்ட 20 ஆசனங்களை நாங்கள் பெறலாம். 20 ஆசனங்களைப் பெற்றால் இந்த நாட்டில் பெரியதொரு சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கும். எதிர்காலத்தில் ஒன்றிணைந்து நாங்கள் செயற்பட வேண்டும்- என்றார். (ப-150)

# இராணுவச் சோதனைகள் மக்களுக்கு நன்மையாம்

வவுனியா, ஜூன் 22

கொரோனாவை காரணம்காட்டி வடக்கில் அமைக்கப்பட்டுள்ள இராணுவச் சோதனைச் சாவடிகளால் மக்களுக்கு நன்மை என்று கூறியுள்ள ஸ்ரீரெலோக் கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிரசாரத்துக்கு எதுவுமில்லாமையால் இராணுவம் தொடர்பாகப் பேசுகின்றார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

போர் முடிந்த பின்னரும் வடக்கு கிழக்கில் இராணுவமயமாக்கல், கண்காணிப்புக்கள் இடம்பெறுகின்றன என்று ஐ.நா. விசேட அறிக்கையாளர் அண்மையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். முல்லைத்தீவில் மாத்தளன், வலைஞர்மடம் போன்ற இடங்கள் இராணுவத்தால் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றன என்று அந்த இடங்ளைச் சேர்ந்த மக்கள் அண்மையில் கவலை வெளியிட்டிருந்தனர். இவ்வாறானதொரு நிலையிலேயே உதயராசா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;


வன்னிப் பெருநிலப்பரப்பை பொறுத்தவரையில் தொடர்ந்தும் மாற்று இனத்தைச் சார்ந்தவர்கள் அதிகாரத்தை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தேர்தல் எனக்கு புதிதல்ல. கடந்தமுறை போட்டியிட்டு சொற்ப வாக்குகளால் தோல்வியடைந்தேன். தமிழ் தேசியக் கூட்டமைப்பு கூட இன்று தேசியத்துடன் அபிவிருத்தி என்று கூறுகிறார்கள். இன்று உள்ள சோதனைச் சாவடிகள் கொரோனாவுக்காக உருவாக்கப்பட்டவை. இலங்கையின் பல பிரதேசங்களிலும் அது இருக்கிறது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் பிரசாரத்துக்கு எதுவுமில்லாமையால் இராணுவக் கெடுபிடி என அதைக் கூறுகிறார்கள். அரசாங்கத்தில் குறை சொல்வதே அவர்களது வழமை - என்றார். (ப-18)

# சு.க. அணியினர் யாழில் வழிபாடு

கொழும்பு, ஜூன் 22

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாண தேர்தல் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள மதத் தலங்களுக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டு மதத் தலைவர்களிடம் ஆசிபெற்று சமகால நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

இந்த வழிபாடுகளும் சந்திப்புகளும் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்றன. யாழ். அம்மன் வீதியிலுள்ள சின்மயா மிசன், யாழ். ஆயர் இல்லம், யாழ். நாக விகாரை, யாழ். ஐந்து சந்தியில் அமைந்துள்ள பள்ளிவாசல் போன்ற மதத் தலங்களுக்குச் சென்ற அவர்கள் அங்கு வழிபாடுளை மேற்கொண்டு, ஆசிகளையும் பெற்றனர். (ப-20)



# கொரோனாவுக்கு பின்னரான தேர்தல்



நிலாந்தன்

ராஜபக்ஷக்கள் தமது இரண்டாவது யுத்தத்திலும் வெற்றி பெறத் தொடங்கி விட்டார்களா? கொரோனா வைரஸ் குறித்த அச்சம் குறையத்தொடங்கிவிட்டது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கைத்தீவில் இறப்பு விகிதம் குறைவானதே. நோய் பெருமளவுக்குக் கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டதாகவே தோன்றுகிறது. பொதுவாகச் சொன்னால் நாட்டில் மக்கள் மத்தியில் வைரஸைப் பற்றிய பயம் தெளிந்து விட்டது.

ராஜபக்சகளைப் பொறுத்தவரை இது ஒரு பெரிய வெற்றி. தமிழ்த் தரப்பினால் போர்க் குற்றம் சுமத்தப்பட்ட ஒரு தளபதியின் தலைமையில் பெருமளவுக்கு படைத்தரப்பு கொரோனா வைரசுக்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளில் முன்னணியில் நின்றது. அது காரணமாக நோய்த்தொற்றுக்கு இலக்கானவர்களில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதியை விட அதிகமானவர்கள் படைத்தரப்பே. இவ்வாறு ஒரு வைரசுக்கு எதிராக படைத்தரப்பு 'ரிஸ்க் 'எடுத்து வெற்றியைக் காட்டி இருக்கிறது என்பது படைத்தரப்பை அதன்மீது வைக்கப்பட்டு வரும் போர்க் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிப்பதற்கு உதவுமா?

எனவே இது விடயத்தில் ராஜபக்ஷக்களுக்கு பலமுனைகளில் வெற்றி கிடைத்திருக்கிறது.

முதலாவது வெற்றி படைத்தரப்பை இதில் ஈடுபடுத்தி அதன்மூலம் அவர்களைப் புனிதப்படுத்த இது உதவியது.

இரண்டாவது படைத்தரப்பை புனிதப்படுத்தினால் அது அதன் தர்க்க பூர்வ விளைவாக யுத்தத்தில் படைத்தரப்பிற்கு உத்தரவிட்ட அரசியல் தலைமையான ராஜபக்ஷ சகோதரர்களையும் அது புனிதப்படுத்தும்.

மூன்றாவது வெற்றி ஒரு நோய்த்தொற்றை எதிர்கொள்ள படையினரை முன்னணிப் படையாக நிறுத்தியதன் மூலம் படையினர் மீது அனுதாபமும் பரிவும் அதிகரித்திருந்த அரசியல் மற்றும் மருத்துவ சூழலில் படை அதிகாரிகளையே சிவில் பொறுப்புகளுக்கு நியமித்ததன் மூலம் யுத்தகாலத்தில் இருந்ததை விடவும் அதிகரித்த அளவில் சிவில் கட்டமைப்புகளை படைமயப்படுத்த முடிந்தது.

நான்காவது வெற்றி வைரஸுக்கு எதிரான போரில் பெற்ற வெற்றி. இதன்மூலம் யுத்தத்தை வெல்லவும் ராஜபக்ஷக்களே தேவை, வைரஸை வெல்லவும் ராஜபக்ஷக்களே தேவை , ஈஸ்டர் குண்டு வெடிப்பு போன்றவற்றை கட்டுப்படுத்தவும் ராஜபக்ஷக்களே தேவை , எனவே ராஜபக்ஷகளைப் போன்ற இரும்பு மனிதர்களை தெரிந்து எடுத்தால் நாடு அச்சப்படாமல் முன்னேறும் என்று சாதாரண சிங்கள மக்கள் நம்பக் கூடிய ஒரு சூழல் கொரோனாவுக்குப்பின் ஏற்படப் போகிறதா?

தேர்தலை விரைவாக நடத்தும்போது இந்த வெற்றி தேர்தல் முடிவுகளில் எதிரொலிக்கும். குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாசவும் ஒருவர் மற்றவருக்கு எதிராக காணப்படும் வரை யு.என்.பி இப்போதைக்கு ஒற்றுமைப்படப்போவதில்லை. எனவே பிரதான எதிர்க்கட்சி உடைந்து போயிருக்கும் ஓர் அரசியல் சூழலில் தேர்தலை வைத்தால் வெற்றி வாய்ப்பு மேலும் அதிகமாகும். மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறுவதற்கு போதுமோ இல்லையோ தெரியாது ஆனால் தனிச் சிங்கள வாக்குகளால் வெல்ல வேண்டும் என்று திட்டமிடும் ராஜபக்ஷக்களுக்கு இது அனுகூலமான காலம்.

ஓகஸ்ட் 5 ஆம் திகதி தேர்தல் நடக்குமாக இருந்தால் அது ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட வாக்கு வங்கியைக் கொண்ட கட்சிகளுக்கு சாதகமானது. இப்படிப் பார்த்தால் ராஜபக் ஷக்களுக்கு சாதகமானது. தமிழரசுக் கட்சிக்கும் சாதகமானது. தமிழரசுக் கட்சிக்கு என்று நிலையான பாரம்பரிய வாக்கு வங்கி ஒன்று உண்டு. அது இப்பொழுது ஈடாடத் தொடங்கிவிட்டது. குறிப்பாக சுமந்திரனுக்கு எதிராக கட்சிக்குள்ளேயே அணி திரட்சிகள் நடந்து வருகின்றன. கட்சியின் தீவுப் பகுதியைச் சேர்ந்தவர்கள் சட்டவாளர் தவராசாவை முன்னுக்கு தள்ள முயற்சிக்கிறார்கள். தவராசாவோடு தமிழ்மாறனையும் துணைக்கு அழைக்க முயற்சிக்கிறார்கள்.



இது தவிர மன்னாரில் சார்ள்ஸ் நிமலநாதனும் செல்வம் அடைக்கலநாதநும் சுமந்திரனுக்கு எதிரானவர்கள் போல தோன்றுகிறார்கள். இது ஒரு தோற்றமாக இருக்கலாம். கட்சியின் வாக்கு வங்கியை பாதுகாப்பதற்கான ஓர் உத்தியாக இருக்கலாம். ஏனெனில் மன்னாரில் கத்தோலிக்கர்கள் மத்தியில் சுமந்திரனை குறித்து நல்ல அபிப்பிராயம் இல்லை. திருக்கேதீஸ்வரம் வளைவு தொடர்பான வழக்கில் இந்துக்கள் சார்பாக சுமந்திரனே வழக்காடுகிறார். இதனால் கத்தோலிக்கர்கள் அவருக்கு ஆதரவாக இல்லை. எனவே சுமந்திரனை எதிர்த்தால் தமது வாக்கு வங்கியைப் பாதுகாக்கலாம் என்று மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சார்ள்ஸும் செல்வமும் சிந்திக்க வாய்ப்பு உண்டு. அதனால்தான் சிங்கள ஊடகமொன்றுக்கு சுமந்திரன் வழங்கிய பேட்டிக்கு எதிராக அவர்கள் அறிக்கை விட்டார்கள். ஆனால் கட்சியின் உயர்மட்டக் கூட்டத்தில் அந்த எதிர்ப்பை அவர்கள் வெளிக் காட்டவில்லை. பம்மிக்கொண்டு இருந்துவிட்டார்கள்.

அப்படித்தான் மற்றொரு வேட்பாளரான ஆர்னோல்டும். இவரும் சுமந்திரனின் அணிக்குள் அடையாளம் காணப்பட்டவர். வடமாகாண சபைக்குள் விக்னேஸ்வரனைச் சுற்றிவளைத்தவர்களில் இவரும் ஒருவர். ஆனால் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலையொட்டி அவர் தனக்கும் சுமந்திரனுக்கும் நெருக்கம் குறைவு என்று காட்ட முற்படுவதாக ஓர் அவதானிப்பு உண்டு. இதுவும் ஒரு தோற்றமே. உண்மையல்ல. வாக்கு வங்கியை பாதுகாப்பதற்கான ஒரு உத்தி. ஏனெனில் ஆர்னோல்ட்டின் வாக்கு வங்கி கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த கத்தோலிக்கர்களுடையது. கத்தோலிக்கர்களின் அரசியல் நிலைப்பாட்டை கத்தோலிக்க திருச்சபையே ஓரளவுக்கு தீர்மானிக்கின்றது. சுமந்திரனின் ஆயுதப் போராட்டம் தொடர்பான கருத்துக்களை பெரும்பாலான கத்தோலிக்க மதகுருக்கள் ஆதரிக்க மாட்டார்கள் என்பது வெளிப்படை. எனவே அவர்கள் சுமந்திரனுக்கு எதிராக நிலைப்பாடு எடுத்தால் அது கத்தோலிக்கர்களின் வாக்குகள் செலுத்தப்படும் திசையைப் பெருமளவுக்குத் தீர்மானிக்கும். இது ஆர்னோல்டுக்கும் தெரியும். எனவே சுமந்திரனோடு நெருங்கி அடையாளம் காணப்படுவதைத் தவிர்த்தால் தனது வாக்கு வங்கியை பாதுகாக்கலாம் என்று அவர் சிந்திக்கக்கூடும்.

இவ்வாறு சுமந்திரனோடு சேர்ந்து நிற்பதன் மூலம் தமது வாக்கு வங்கியை இழப்பதற்கு விரும்பாத கூட்டமைப்புப் பிரமுகர்கள் சுமந்திரனிடமிருந்து விலகி நிற்பது போல ஒரு தோற்றத்தையாவது காட்டவேண்டிய ஓர் அரசியல் சூழல் ஏற்பட்டிருக்கிறதா?

ஆனால் தமிழ்த் தேசிய் கூட்டமைப்புக்குள் ஏற்பட்டிருக்கும் இந்த உட்கட்சி முரண்பாடுகளை வெற்றிகரமாகக் கையாண்டு கட்சிக்குள் இருந்து உடைந்து வரக்கூடியவர்களைத் தம் வசப்படுத்தி கூட்டமைப்பைத் தேர்தல் களத்தில் தோற்கடிக்கத் தக்க வியூகங்கள் எதிரணியிடம் உண்டா ? என்பதே இங்கு முக்கியமான கேள்வியாகும்


கடந்த மூன்று மாதங்களுக்கு மேலான நோய்த் தொற்று காலத்தில் தமிழ்க் கட்சிகள் பெருமளவுக்கு நிவாரணம் வழங்குவதிலேயே தனது கவனத்தைக் குவித்திருந்தன. ஒருவர் மற்றவருக்கு எதிராக விமர்சனங்களை தெரிவிக்கும் போக்கு பெருமளவிற்கு குறைவாக காணப்பட்டது. எனினும் சில கிழமைகளுக்கு முன் சுமந்திரன் ஒரு சிங்கள ஊடகத்துக்கு வழங்கிய பேட்டியோடு கொரோனாவிலிருந்து தமிழ் மக்களின் கவனம் சடுதியாக அரசியல் கொரோனாக்களை நோக்கித் திரும்பிவிட்டது. அதாவது வைரஸிலிருந்து அரசியல் வாதிகளை நோக்கி கவனம் திருப்பப்பட்டது. அதற்கு முன்பு பெருமளவிற்கு மருத்துவ அதிகாரிகள் என்ன கூறுகிறார்கள் என்பதைத்தான் சனங்களும் கவனித்தார்கள் ஊடகங்களும் பெரிதாக்கிக் காட்டின. ஆனால் இப்பொழுது மறுபடியும் தேர்தல் களம் திறக்கப்பட்டுள்ளது. வைரஸை குறித்த செய்திகளிலிருந்து முழுமையாக விடுபடாவிட்டாலும் ஓரளவுக்கு அரசியல் கட்சிகளின் மீது கவனம் திருப்பப்பட்டுவிட்டது.

இவ்வாறான ஒரு பின்னணியில் தேர்தல் நடப்பதற்கு கிட்டத்தட்ட ஒன்றரை மாத கால இடைவெளி உண்டு. இந்த ஒன்றரை மாத காலத்துக்குள் கூட்டமைப்புக்கு எதிரான சக்திகள் கட்சிக்குள் காணப்படும் உட்கட்சி முரண்பாடுகளை வெற்றிகரமாக கையாண்டு தமிழ் மக்களின் கவனத்தை அதை நோக்கி குவித்து கூட்டமைப்பை தோற்கடிக்க வேண்டும். அதற்கு வேண்டிய வியூகம் அவர்களிடம் உண்டா ? அதற்கு ஒன்றரை மாத கால அவகாசம் போதுமா?

இது ஒரு பிரச்சினை. ஸ்தாபிக்கப்பட்ட வாக்கு வங்கியைக் கொண்ட கட்சிகள் இதனால் லாபம் அடையும். ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட வாக்கு வங்கிகளை உடைக்க வேண்டிய நிலையிருக்கும் கட்சிகளுக்கு கால அவகாசம் போதாது. இப்படிப் பார்த்தால் கொரோனாவுக்குப் பின்னரான தமிழ் அரசியலில் மறுபடியும் ஒரு தடவை துலக்கமான மாற்றங்களைக் காண முடியாது என்றே தோன்றுகிறது. வைரஸ் தொற்று காலத்தில் தமிழ் மக்கள் கற்றுக்கொண்டவற்றின் அடிப்படையில் சிந்தித்து வாக்களித்தால் கூட அது பெரிய மாற்றங்களை ஏற்படுத்துமா?

ஏனெனில் வைரசுக்கு முன்னிருந்த அதே கட்சிகளும் அரசியல்வாதிகளும் தான் வைரசுக்கு பின்னரும் வருகிறார்கள். வைரஸுக்கு முன்னிருந்த அதே கட்சி சுலோகங்களும் கோஷங்களும் தான் மறுபடியும் சுவர்களில் ஒட்டப்படுகின்றன. வைரஸுக்கு முன்னிருந்த அதே விரோதமும் ஒற்றுமையற்ற தன்மையும் தீர்க்கதரிசனமற்ற தன்மையும்தான் வைரஸுக்கு பின்னரும் காணப்படுகிறது. எனவே கூட்டிக் கழித்துப் பார்த்தால் வரவிருக்கும் தேர்தலில் தமிழ் வாக்குகள் வெற்றிகரமாக திரட்சியுறும் வாய்ப்புக்கள் குறைவாகவே தெரிகின்றன. அதேசமயம் வைரஸை வெற்றி கொண்ட ராஜபக்ஷக்கள் சிங்கள பௌத்த வாக்குகளையும் சிங்கள, கிறிஸ்தவ வாக்குகளையும் தங்களை நோக்கித் திரட்ட முடியும். அதை எதிர்த்து நிற்க யு.என்.பிக்குச் சக்தி காணாது. ஆக மொத்தம் சிங்கள வாக்குகள் திரளும். தமிழ் வாக்குகள்?

# வேப்பமரக் குற்றியை ஏற்றியவர் கைது



வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் கப் ரக வாகனத்தில் ஏற்றப்பட்ட வேப்ப மரக் குற்றிகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் வேலி ஓரமாக நின்ற வேப்ப மரம் வெட்டப்பட்டு கப் ரக வாகனத்தில் ஏற்றப்படுவதாக 119 பொலிஸாருக்குத் தகவல் வழங்கப் பட்டது.

இதனையடுத்து விரைந்து செயற்பட்ட வவுனியா பொலிஸார் குறித்த இடத்துக்குச் சென்று 6 வேப்ப மரக் குற்றிகளுடன் கப்ரக வாகனத்தை கைப்பற்றினர்.

இச்சம்பவம் தொடர்பில் ஒருவரைக் கைதுசெய்தனர். மேலதிக விசாரணைகளின் பின் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ப-18)

## கண்ணீர் அஞ்சலி



மானிப்பாய் இந்து கல்லூரியின் பழைய மாணவனும், பழைய மாணவர் சங்க முன்னை நாள் தலைவரும், சமய பற்றாளனும், புகழ்பூத்த நாடகத்துறை கலைஞனும், பயிற்றுவிப்பாளரும், சிறந்த சமூகத் தொண்டனுமாகிய S.K. **உதயசூரியர்** என அழைக்கப்படும்.

### கனகசூரியர் உதயசூரியர்

**(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்)**

அவர்களின் மறைவு கல்லூரி சமூகத்திற்கும், மானிப்பாய் சமூகத்திற்கும் பேரிழப்பாகும். அன்னாரின் மறைவிற்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துகொள்வதோடு ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**மானிப்பாய் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**

## மரண அறிவித்தல்

தோற்றம்
06
08
1943



மறைவு
21
06
2020

### நவரத்தினம் சிவசுப்பிரமணியம்

**(ஓய்வுபெற்ற மின்னியலாளர் - காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை)**

வட்டுக்கோட்டை துணைவியை பிறப்பிடமாகவும் ஊரெழு மேற்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் சிவசுப்பிரமணியம் நேற்று (21.06.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், அருளாம்பிகையின் அன்புக் கணவரும், சுதாமதி (சுவிஸ்), சுதாகரன் சுரேஸ்குமார், சுதர்ஜினி, சுபாஜினி (பெல்ஜியம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சச்சிதானந்தம் (சுவிஸ்), பரமேஸ்வரி, சுதாகர், உருத்திரராசா (பெல்ஜியம்) ஆகியோரின் அன்பு. மாமனாரும், இராமனாதி நாகேஸ்வரி, இரத்தினம் பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அவந்திகா, மிதுலன், லதுசன், பிரதுலன், அக்ஷயா, கஸ்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும், லோகாம்பிகை, தருமராசா, லில்லிமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2020) திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பொக்கனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஊரெழு மேற்கு,**
**சுன்னாகம்.**

**தகவல் : -**
**குடும்பத்தினர்.**

**077 005 0890**

## மரண அறிவித்தல்



### கனகசூரியர் உதயசூரியர்

**ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்**
**(மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்னாள் தர்மகர்த்தா சபை தலைவர்)**

யாழ். ஆனைக்கோட்டை கூழாவடியைப் பிறப்பிடமாகவும் மெம்மோறியல் லேன் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசூரியர் உதயசூரியர் நேற்று (21.06.2020) ஞாயிற்றுக்கிழமை மருதடியான் பாதாரவிந்தங்களை சென்றடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசூரியர்-நல்லம்மா தம்பதியரின் மகனும், உசனைச் சேர்ந்த சின்னத்தம்பி காலஞ்சென்ற சிதம்பரம் தம்பதியரின் மருமகனும், சிவநிதியின் அன்புக் கணவரும், விஜயலட்சுமி, செல்வலட்சுமி, ஜெயலட்சுமி, காலஞ்சென்ற ஜெயசூரியர் மற்றும் உதயலட்சுமி, பாலசூரியர், ஞானசூரியர், கணேசசூரியர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சத்தியானந்தன், விஸ்வலிங்கம், குணவதனி, சுபாஜினி, புனிதா, சிவகரன், பாலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சுதன் மற்றும் ஜனகன், மதுரா, நிவேதா, துர்க்கா ஆகியோரின் மாமனாரும், அருசன், நிலோஜன் ஆகியோரின் சிறிய தகப்பனாரும், சௌமியா, சூரியா, அர்ச்சனா, மிதுலா, புருசோத்தமன் ஆகியோரின் பெரிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2020) திங்கட் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14.06.1955 | 21.06.2020 |

**மெம்மோறியல் லேன்,**
**மானிப்பாய்.**

**தகவல் : மனைவி,**
**076 484 7547**

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977ஆம் ஆண்டு பிறந்த A/L படித்த மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு:077 211 6919

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம். அரச உத்தியோகம். நற்பண்புடைய. மாத வருமானம் 100,000 மேல் (திருவாதிரை. 08 இல் செவ்வாய் கிரகபாவம் 60) கொண்ட மணமகனுக்கு 34 வயதுக்குட்பட்ட படித்த அழகிய சிவந்த. பண்பான. போரால் பாதிக்கப்பட்ட. பெற்றோரை இழந்து வறுமை கோட்டுக்குட்பட்ட மணமகளை எதிர்பார்க்கின்றனர். (கூட்டெண் 01 அல்லது 05) சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

தொடர்பு::077 6935338

## கோத்தாவின்...

லங்காராம விகாராதிபதி சங்கைக்குரிய ரலபனாவே தம்மஜோதி தேரர் தெரிவித்தார்.

பரஸ்பரம் ஒருவருக்கொருவர் தூற்றிக் கொள்ளும் அரசியல் மேடைகளுக்கு அப்பால் தமது கொள்கையை மிகச் சரியாகவும் அச்சமற்றும் முன்வைத்த ஒரேயொரு தலைவர் கோத்தாபயவே.

ஜனாதிபதி நேற்று முற்பகல் வரலாற்று சிறப்புமிக்க லங்காராம விகாரைக்கு சென்று விகாராதிபதி சங்கைக்குரிய ரலபனாவே தம்மஜோதி நாயக்க தேரரை சந்தித்தபோதே தேரர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். கடந்து சென்ற சில மாதங்களில் சரியான திசையில் நாட்டைக் கொண்டுசென்ற ஜனாதிபதி, மகாசங்கத்தினர் மற்றும் மக்களின் நம்பிக்கைக்குள்ளாகியுள்ளார் எனவும் தேரர் மேலும் குறிப்பிட்டார். (ஒ.5)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆங்கிலத்தில் சரளமாகக்கதைக்கப் பயில Personal Classes ஆரம்பமாகவுள்ளன.
ஆசிரியர் விஸ்வப்பிரம்ம ஸ்ரீ ந.விக்னேஸ்வரன் ஆச்சாரியார். வகுப்புகள் யாழ்ப்பாணம் சங்கானை.

Tel: 077 675 1649

## ஒவ்வொரு....

என்று சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

வாக்குப்பதிவு காலத்தில் சுகாதார அமைச்சு வழங்கிய பாதுகாப்பு வழிகாட்டுதல்களுக்கு இணங்க தேர்தல் அதிகாரிகளை இந்த சுகாதார அலுவலகர் கண்காணித்து உதவுவார் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

இந்த செயல்முறைக்கு ஒரு பொதுச் சுகாதார பரிசோதகர் அல்லது ஒரு குடும்பநல சுகாதார உத்தியோகத்தர் நியமிக்கப்படுவார் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி பாதுகாப்பான தேர்தலை நடத்த சுகாதார அதிகாரிகள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர் என்று மருத்துவர் சமரவீர சுட்டிக்காட்டினார்.

'கொரோனா பரவுவதைத் தடுக்க வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களை அனைத்து தேர்தல் அதிகாரிகளும் பின்பற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. காய்ச்சல் போன்ற அறிகுறிகள் உள்ளவர்கள் வாக்களிக்கும் பணியின் தொடக்கத்தில் வாக்குச் சாவடிகளுக்குள் நுழையக் கூடாது. அதற்கு பதிலாக வாக்குப்பதிவு காலத்தின் கடைசி மணி நேரத்தில் அவர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறது. வாக்குச் சாவடிகளுக்குள் நுழைவதற்கு முன்பும், வாக்குச் சாவடிகளை விட்டு வெளியேறிய பின்னரும் கை கழுவுதல் மற்றும் பிற சுகாதார நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும். வாக்குச் சாவடிகளில் பொதுமக்களின் தொடர்புகளை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' என்றும் சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார். வாக்குச் சாவடிகளுக்குள் நுழையும் போது பேனாவை எடுத்துச் செல்லுமாறு வாக்காளர்களிடம் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஒ.5)

## வல்லிபுரக்....

பேணாமலும் பூசை இடம்பெற்றதாக சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. அத்துடன் சுவாமி காவிய ஒருவர் நான்கு நாள்களாக காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்ததும் கண்டறியப்பட்டது. இதனால் அவருடன் இணைந்து சுவாமி காவியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதோடு, நித்திய பூசைகள் பாதிக்கப்படாமல் தொடர்வதற்கு ஏதுவாக ஆலய பிரதம குரு உள்ளிட்ட 5 பேர் தவிர்ந்த ஏனையோர் 14 நாள்களுக்கு ஆலயத்துக்குச் செல்வதற்கு தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்புச் சட்டத்துக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வழிபாட்டிடங்களில் ஐம்பது பேருக்கு மேல் ஒன்று கூடாத வகையிலும் முகக் கவசம் அணிந்தும் சமூக இடைவெளியைப் பேணியும் கை கழுவுதலுக்கு உட்பட்டும் வழிபாடுகளை அவதானமாக நடத்தவேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்ட போதும் அதனை மீறும் வகையில் பல நூற்றுக் கணக்கான மக்கள் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் வல்லிபுர ஆழ்வார் கோயிலில் ஒன்று கூடுவதாக பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு பல முறைப்பாடுகள் பொதுமக்களிடமிருந்து தொலைபேசி வாயிலாகக் கிடைக்கப் பெற்று வந்தது. இது குறித்து கடந்த வாரமும் பொதுச் சுகாதாரபரிசோதகர்கள் குழுவாகச் சென்று ஆலய நிர்வாகத்துக்கு அறிவுறுத்தியிருந்தனர். அதன் பின்னரும் நேற்றும் சுகாதார விதிமுறைகள் மீறப்பட்டமையாலேயே ஆலயத்துக்குப் பொதுமக்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஒ.5,9)

## மணிவிழாவும் சேவைநயப்பும்



கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தின் பிரதி முதல்வர்

திருமதி
**மேரி ரீட்டா மகேந்திரராசா எட்வேட்**

அவர்களின் **மணிவிழாவும் சேவை நயப்பும்**

எமது பாடசாலையில் 09.01.2000ஆம் ஆண்டு தொடக்கம்-ஆசிரியராகவும், பிரதி முதல்வராகவும் தன்னலங் கருதாது அளப்பரிய சேவையாற்றி 22.06.2020 இல் மணிவிழா காணும் திருமதி மெ.மகேந்திரராசா எட்வேட் அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்பானதாகவும் மகிழ்வானதாகவும் அமைய வாழ்த்துகின்றோம்.

**சேவை விவரம்:**

| | | |
|---|---|---|
| வ/திருமகள் அ.த.க. பாடசாலை | 21.09.1988 | - 20.01.1992 |
| யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை | 21.01.1992 | - 31.12.1993 |
| வ/செட்டிக்குளம் ம.வி | 02.02.1994 | - 14.05.1997 |
| வ/நன்னாட்டி அ.த.க. பாடசாலை | 15.05.1997 | - 07.01.1999 |
| கிளி/கனகாம்பிகைக்குளம் ம.வி | 08.01.1999 | - 31.08.2000 |
| கிளி/பரந்தன் இந்து ம.வி | 01.09.2000 | - 21.06.2020 |

Best Wishes

**அதிபர்,
ஆசிரியர்கள்,
கல்விச்சாரா ஊழியர்கள்,
கிளி/பரந்தன் இந்து ம.வி**

உ
சிவமயம்



கொக்குவில்-நந்தாவில்

## கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

### புனராவர்த்தன அஷ்ட பந்தன நவகுண்ட பகூஷ மஹாயாஹ பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம்

எண்ணெய்க் காப்பு:
23.06.2020 செவ்வாய்க்கிழமை
காலை 6.00 - மாலை 3.00 மணி வரை
மஹாகும்பாபிஷேகம்: 24.06.2020 புதன்கிழமை
காலை 5.50 - மாலை 6.30மணி வரை

அடியார்கள் யாவரும் மூலமூர்த்திக்கும் பரிவாரத் தெய்வங்களுக்கும் எண்ணெய்சாத்தி தொடர்ந்து மறுநாள் நடைபெறவுள்ள மஹாகும்பாபிஷேக நிகழ்வையும் கண்டுகளித்து அம்பாளின் திருவருளைப் பெற்றுப் பேரின்பப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

**ஆலய பரிபாலன சபை**

## IMMIDIATE VACANCY

### HR Manager

A reputed Electrical Engineering company situated in Jaffna is in search of a competent to fill the position of **HR Manager**.

**Requirements :**

01. A bachelor's degree / Professional qualification in field of human resources or any other related field.
02. 5 years experience in the field.
03. Effective communication skill in English
04. Knowledge in electrical/mechanical field would be an advantage
05. Age limit 60

Successful candidate will be provided with attractive salary package.

**Please contact :021 221 6925**

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## பதவி வெற்றிடம்

### உபவிடுதிக் காப்பாளர்கள் :ஆண், பெண்

- க.பொ.த சாதாரண தரத்திற்குக் குறையாத கல்வித் தகைமை
- விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம். உணவும் தங்குமிட வசதியும் இலவசம்
- வயதெல்லை : 25 -50
- சம்பள அளவுத்திட்டம் : ரூபா 12,010 - 6X250 + 14X280-17430
- ஆரம்பச் சம்பளம் : ரூபா 12,010.00 (விசேடபடி) + ரூபா 6000/=

### பாதுகாப்பு அலுவலர் (பகல்– பெண்)

- க.பொ.த சாதாரண தரத்திற்குக் குறையாத கல்வித் தகைமை
- வயததெல்லை : 25-50
- சம்பளம் : பேசித் தீர்மானிக்கப்படும்.

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் 05.07.2020 இற்கு முன்னர் சைவ வித்தியா விருத்திச் சங்கம் , கலாசாலை வீதி. திருநெல்வேலி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி,திருநெல்வேலி.
தொலைபேசி இல. 021 222 6525**

**தி. செல்வமனோகரன்
செயலாளர்**

## வீட்டினை...

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆதரவு வழங்கியுள்ளது. இதை வடக்கு, கிழக்கிலுள்ள மாற்றுக் கட்சிகளும் தென்னிலங்கை அரசியல்வாதிகளும் விமர்சித்து வருகின்ற நிலையில் ஞானசார தேரரும் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தனிநாட்டுக்கு வித்திடும் சமஷ்டியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தாரக மந்திரமாக இருக்கின்றது.
புலிகளின் கனவை நிறைவேற்றத் துடிக்கும் கூட்டமைப்பின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் அரசு உன்னிப்பாக அவதானிக்க வேண்டும். இல்லையேல் கூட்டமைப்பின் கோட்டையான வடக்கு, கிழக்கு தனிநாடாக மாறுவதைத் தடுக்க முடியாமல் போய்விடும்.
அன்று தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக புலிகள் இருந்தார்கள். இன்று தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக கூட்டமைப்பினர் உள்ளனர். இதுதான் உண்மை. இதெல்லாம் சிங்கள மக்களுக்கும் தெரியும் என்றார். (ஒ.5,22)

## முழுமையான...

முன்னெடுத்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரைப் பணித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
முகமாலை காரைக்காடு குளப்பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் உட்பட அதனோடு நிகழ்ந்த விடயங்கள் தொடர்பாக அதிக கரிசனை கொண்டிருக்கின்றேன். அந்தச் சம்பவம் தொடர்பில் முன்னுக்குப்பின் முரணான தகவல்கள் ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் பரப்பட்டு வருவதையும் கவனத்தில் கொண்டுள்ளேன்.
நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் வடமாகாண மூத்த பொலிஸ்மா அதிபருடன் பேச்சுக்களை நடத்தியுள்ளேன்.
இது தொடர்பில் முழுமையான விசாரணையை முன்னெடுத்து அறிக்கையொன்றை அளிக்குமாறும் கோரியுள்ளேன். அத்துடன் வடக்கு மாகாண மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும், அமைதியை சீர்குலைக்கக் கூடாது என்பதையும் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளேன், என்றார். (ஒ.5)

## தாக்குவதற்கு முயற்சி...

துப்பாக்கிக் குண்டுகள் துளைத்த மைக்கான அடையாளங்கள் காணப்படுவதாக உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது.
அவரது முதுகுப்புறமாக நுழைந்த துப்பாக்கிக் குண்டு நுரையீரலை தாக்கி கையையும் தாக்கி வெளியேறியுள்ளது. நுரையீரல் தாக்கப்பட்டமையாலேயே உயிரிழப்பு நேர்ந்துள்ளது. மற்றொரு துப்பாக்கிக் குண்டு அவரது கால் தொடைப் பகுதியைத் தாக்கியுள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. இதேவேளை, இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட 4 பேரும் வாக்குமூலம் வழங்கியுள்ளதாகவும், அவர்களை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
தாம் மணல் ஏற்றச் சென்றபோது அங்கு இராணுவத்தினர் வந்ததாகவும், 4 பேரும் கையை உயர்த்திக் கொண்டு இராணுவத்தினரிடம் செல்லும்போது, உயிரிழந்த இளைஞன் தப்பிச்செல்ல முயற்சித்ததாகவும் அதன்போதே துப்பாக்கிப் பிரயோகம் அவர் மீது மேற்கொள்ளப்பட்டதாகவும், கைதான 4 பேரும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர் எனப் பொலிஸ் தரப்புக் கூறுகின்றது. தாக்கி விட்டுத் தப்பிச் செல்ல முயன்றதாலேயே இளைஞன் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக இராணுவச் சிப்பாய் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர். (ஒ.5,26)

## வாக்களிப்பு....

கண்டியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார்.
காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்கெடுப்பு இடம்பெறலாம் எனத் தெரியவருகின்றது. வழமையான காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை 9 மணி நேரமே வாக்களிப்புக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.
எனினும், இம்முறை தனிநபர் இடைவெளி உட்பட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தேர்தல் நடைபெறவுள்ளதாலேயே இந்த முடிவு எடுக்கப்படவுள்ளது எனக் கூறப்படுகின்றது. இந்த நிலையில் இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரிடம் கேட்டபோது,
'5ஆம் திகதி வாக்களிப்பு முடிவடைந்ததும் 6ஆம் திகதி தான் வாக்கெண்ணும் பணி இடம்பெறும் என்ற முடிவை மாத்திரமே நாம் எடுத்துள்ளோம். எதிர்வரும் 25ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு கூடவுள்ளது. இதன்போதே வாக்களிப்பு நேரத்தை நீடிப்பது தொடர்பில் கலந்துரையாடி இறுதி முடிவெடுக்கப்படும்.' என்றார்.
கடந்த ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்குச் சீட்டு நீளம் என்பதால், வாக்களிப்பு நேரம் ஒரு மணித்தியாலத்தில் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ.க44)

## இந்துக்களின்...

வீசப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன. ஆலயத்தின் வெளிப்பகுதியில் காணப்பட்ட பிள்ளையார் சிலை குப்பைகள் மற்றும் மரத்துண்டுகளால் மூடப்பட்டிருந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.
இந்த ஆலயம் தொடர்ச்சியாக இனம் தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டு, சேதப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த விடயம் தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ஒ.க56)

## சர்வாதிகார....

முழுமையான இராணுவ ஆட்சியை நோக்கிய பயணமாகவே தற்போதைய அரசின் முன்னேற்பாடுகள் காணப்படுகிறன. இலங்கையில் மக்களை நேசிக்கக்கூடிய ஜனநாயக ஆட்சியை ஐக்கிய தேசியக் கட்சியால் மாத்திரமே உறுதிப்படுத்த முடியும் என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
நேற்று ஞாயிற்றுக்கிழமை விசேட அறிவித்தலொன்றில் இதனைக் கூறிய அவர் அதில் மேலும் தெரிவித்ததாவது:
19 ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் ஜனநாயக உரிமைகளை நாம் உறுதிப்படுத்தியுள்ளோம். தேர்தலை நடத்துவதற்கு ஆணைக்குழு இருக்கிறது. முன்னாள் ஜனாதிபதியாக இருந்தாலும் அவரது செயற்பாடுகளைக் கூட இடைநிறுத்தக்கூடிய அதிகாரம் இந்த ஆணைக்குழுவுக்கு காணப்படுகிறது. பொதுஜன பெரமுனவால் இவற்றுக்கு பெரும் சவால் ஏற்பட்டுள்ளது.
தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினரையும் தலைவரையும் பகிரங்கமாகத் தூற்றுகின்றனர். பொலிஸ் அதிகாரிகளுடன் செயற்பட இராணுவத்தினரை நியமிக்கின்றனர். பொலிஸார் புறந்தள்ளப்பட்டுள்ளனர். ஜனாதிபதியை சந்திக்க வேண்டும் என்று கூறிய முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத் தலைவர் கொல்லப்பட்டுள்ளார். சிறிலங்கன் விமான சேவையின் மூத்த அதிகாரியாக சேவையாற்றியிருந்த ரஜீவ பிரகாஷ் ஜயவீர என்பவரின் சடலம் அண்மையில் சுதந்திர சதுக்கத்துக்கு அருகில் கண்டு பிடிக்கப்பட்டது. அரச சேவை ஆணைக்குழுவின் நிலைமையும் இது போலவே உள்ளது. அவர்களை மாற்ற முடியாத சந்தர்ப்பங்களில் இராணுவத்தினர் அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் திணைக்களங்களின் பிரதானிகளாக நியமிக்கப்படுகின்றனர். அவர்களிடமே முக்கிய பொறுப்புக்கள் அனைத்தும் ஒப்படைக்கப்படுகின்றன.
விசேட ஜனாதிபதி செயலணிகள் அமைக்கப்பட்டுள்ளன. எமது நாட்டிலுள்ள இராணுவத்தினர் உலகிலேயே சிறந்த வீரர்களாவர். போராட்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளுக்கே அவர்கள் பொருத்தமானவர்கள். அவற்றுடன் தொடர்புடைய பொறுப்புக்களை அவர்களிடம் கையளிக்கலாம். இலங்கையின் நிர்வாக சேவையை போருக்கு அனுப்பினால் முடிவுகள் வேறு மாதிரியாக இருக்கும். யாழ்ப்பாணத்துக்கு போருக்கு அனுப்பினால் அது காலியிலேயே நிறைவுக்கு வரும். அதில் திறமை இல்லை. ஆனால் நாட்டை நிர்வகிப்பதற்கு பிரதேச செயலகங்கள், காணிகளுடன் தொடர்புடைய விடயங்கள் உள்ளிட்டவற்றைச் செய்வதற்கு திறமை அத்தியாவசியமானதாகும். இதனை இராணுவத்தினரால் செய்ய முடியாது. இதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும். உரிமைகளைப் பாதுகாக்க நாம் அனைவரும் ஒன்றிணைவோம், என்றார். (ஒ.5)

## தேர்தல்...

செய்வது என்பது தொடர்பில் வவுனியாவில் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய மற்றும் ஆணைக்குழு உறுப்பினர் ஹூல் உள்ளிட்டோர் கலந்து கொண்டு, வடக்கு மாகாண அதிகாரிகளுக்கு விளக்கமளித்தனர்.
வவுனியா மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று மாலை 4 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களையும் சேர்ந்த, மாவட்டச் செயலர்கள், தேர்தல் முறைப்பாட்டுக்குப் பொறுப்பான நிர்வாக நிலை அதிகாரிகள், பணியாளர்கள், உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.
வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் 2013ஆம் ஆண்டு நடத்தப்பட்டபோது எவ்வாறான தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன என்பதையும் அதனை எவ்வாறு தேர்தல்கள் திணைக்களம் முகாமைசெய்தது என்பதையும் கூறி தவிசாளர் அதிகாரிகளைத் தெளிவூட்டினார்.
அந்தக் காலப் பகுதியில் கிளிநொச்சியில் வாக்காளர் அட்டைகள் தேர்தலுக்கு முதல் நாள் பறிக்கப்பட்ட சம்பவம் நடைபெற்றதையும், அதன் பின்னர் மக்களை பயமின்றி தேர்தல் அன்று எவ்வாறு வாக்களிக்க ஊக்குவித்தோம் என்பதையும் இந்தக் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டினார். (ஒ.5)

## மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 08 . 1944



மறைவு
21 . 06 . 2020

### திருமதி ருக்குமணி ஆனந்தவேல்

(ஓய்வுநிலை கூட்டுறவு பரிசோதகர், முன்னாள் நீர்வேலி கந்தசுவாமி கோவில் தேவஸ்தான போசகரும், பொருளாளரும், நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சிக்கனகடன் வழங்கும் கூட்டுறவுச் சங்க தலைவர், நீர்வேலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்க தலைவர், நீர்வேலி ஸ்ரீமுருகன் வேதவல்லி சேமிப்பு கழக தலைவர்)

நீர்வேலி கந்தசுவாமி கோவிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ருக்குமணி ஆனந்தவேல் நேற்று **(21.06.2020)** ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா - இராசாங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பிமுத்து - நாகமமா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஆனந்தவேலின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தனபாலசிங்கம், மல்லிகாதேவி ஆகியோரின் சகோதரியும் பொன்னுச்சாமி காலஞ்சென்றவர்களான சுகுணாதேவி, செல்வரத்தினம், இராசம்மா மற்றும் சோதிலிங்கம் (நீர்வேலி கந்தசுவாமி கோவில் பரிபாலனசபை தலைவர்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(22.06.2020)** திங்கட்கிழமை பிற்பகல் **02.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி கந்தசுவாமி
கோவிலடி, நீர்வேலி.

தகவல்: புவிச்சந்திரன் வித்தியா
(பெறாமகள்)

021 321 3443, 077 381 6850

### புதிய தொற்றாளர்கள்...

மடைந்து மேலும் 26 பேர் நேற்று வீடு திரும்பியுள்ளனர். சுகாதார அமைச்சால் நேற்று வெளியிடப்பட்ட நாளாந்த அறிக்கையின் பிரகாரம் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதாக அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1,950 ஆகக் காணப்படுகின்றது. குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,498 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்றுமுன்தினமும் நேற்றும் கொரோனாத் தொற்றுடன் எவரும் அடையாளம் காணப்படவில்லை. இறுதியாக கடந்த ஏப்ரல் 16ஆம் திகதியும் (65 நாள்களுக்கு முன்னர்) இவ்வாறு எவரும் அடையாளம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5,22)

### முன்னரை விடவும்...

குடியேற்றங்களை ஏற்படுத்தி குடிப்பரம்பலை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமாக இருந்தால் சாத்வீக ரீதியாக தீவிரமாகப் போராடுவதற்குத் தயங்கப்போவதில்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். இனவாதிகளால் முன்னெடுக்கப்படும் அடக்குமுறைச் செயற்பாடுகளைக் கண்டு தமிழர்கள் அடிபணியமாட்டார்கள் எனவும் அவர் உறுதிபடக் கூறினார்.

இதேவேளை, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முன்பைவிடவும் கூடுதலான ஆதரவைத் தமிழ் மக்கள் வழங்குவர் என எதிர்பார்ப்பதாகவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சிப்பதைத் தவிர மாற்றுத் தீர்வுகளை மற்றைய கட்சிகள் கொண்டிருக்காமை காரணமாகவே தமிழ் மக்கள் தமக்குப் பெருவாரியாக வாக்களிப்பர் என நம்புவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஒ.5,22)

### தாயும்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. குடும்பத் தகராறு காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஒ.5,159)

## சுற்றிவளைப்பு தொடர்கின்றது

யாழ்ப்பாணம், ஜுன் 22

வல்வெட்டித்துறை கெருடாவில், சீலாப்புலம் பகுதியில் நேற்று அதிகாலை சுமார் 3 மணித்தியாலங்கள் படையினரும் பொலிஸாரும் இணைந்து சுற்றிவளைப்புத் தேடுதலை முன்னெடுத்தனர். ஊரிக்காடு இராணுவ முகாம் படையினரும் வல்வெட்டித்துறை பொலிஸாரும் இணைந்து இந்தத் தேடுதலை முன்னெடுத்தனர். சுமார் 40 வீடுகள் சோதனையிடப்பட்டன.

நீதிமன்றப் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இருவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறை, கொம்மாந்துறையில் கடந்த வாரம் கிணற்றிலிருந்து 3 குண்டுகளும் ஒரு துப்பாக்கியும் மீட்கப்பட்டிருந்தன. சில தினங்களுக்கு முன்னரும் யாழ்ப்பாணத்தின் மூளாய் பகுதியில் இவ்வாறான சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.ம26)

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

வெளி நாடுகளுக்கான பொதிகள் கடிதங்கள் சேவை DHL மூலம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருமுருகன் கொம் நெற் (Pvt)Ltd
321, K.K.S. Road, Jaffna
கிளைகள்:நெல்லியடி, திருநெல்வேலி, கொழும்பு. 0777 554 528

# கோத்தாவுக்கான ஆதரவு என்றென்றும் தொடரும்!

## பிறந்த தின வாழ்த்தில் மஹிந்த உறுதி

கொழும்பு, ஜுன் 22

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு எனது ஆதரவும், வழிகாட்டல்களும் தொடர்ந்து கிடைக்கும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் பிறந்தநாளாகும். அதை முன்னிட்டு தனது டுவீட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் உள்ளதாவது:

உங்கள் வாழ்க்கையின் இன்னொரு வருடத்தை நீங்கள் கொண்டாடும் இந்தத் தருணத்தில் இலங்கை தொடர்பாக எமக்குள்ள கூட்டு நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான வழிகாட்டுதல்களை நீங்கள் வழங்குவதற்கான ஞானம், வலிமை மற்றும் பொறுமை உங்களுக்குக் கிடைக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

இந்த பாதையில் நீங்கள் எடுத்துவைக்கும் ஒவ்வொரு காலடியிலும் எனது ஆதரவும் வழிகாட்டுதல்களும் கிடைக்கும் என்ற உத்தரவாதத்தை வழங்குகின்றேன்- என்றுள்ளது. (எ-ரி1)



# அச்சுறுத்தவேயில்லை கோத்தா அதட்டினார்!

## மஹிந்த ராஜபக்ஷ வக்காலத்து

கொழும்பு, ஜுன் 22

மத்திய வங்கியின் ஆளுநர், அதிகாரிகளை ஜனாதிபதி அச்சுறுத்தவில்லை, அதற்கான தேவையும் கிடையாது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி அதிகாரிகளை அண்மையில் சந்தித்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நாட்டின் பொருளாதார வீழ்ச்சி , கொவிட் 19இன் பின் இலங்கையின் பொருளாதார நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தார். அப்போது அதிகாரிகளை அவர் கடிந்துகொண்டார். இது அரசியல் வட்டாரங்களில் விமர்சனங்களை ஏற்படுத்தியிருந்தது. அது தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளாவது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ சற்றுக் குரலை உயர்த்தி அரச அதிகாரிகளுடன் கதைக்கும்போது அரசாங்கம் அரச ஊழியர்களை அச்சுறுத்துவதாக குறிப்பிடுகிறார்கள். ஜனாதிபதி அமைச்சரவையின் பிரதானி என்ற பதவியில் இருந்துகொண்டு மத்திய வங்கியின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

தற்போது வங்கி நிர்வாகம் முறையாகச் செயற்படுகிறது. அதன் பயனை மக்களே பெறுகிறார்கள். உள்ளகப் பிரச்சினையின் காரணமாக குடும்பம் மற்றும் அரசியல் கட்சி பிளவுபட்டால் பெரும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும். வரலாற்றுப் பின்னணியை கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி இன்று இரண்டாகப் பிளவுபட்டுள்ளது. இதற்கு முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பொறுப்பு கூற வேண்டும்.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட தேர்தல் பரப்புரைக் கருத்துக்கள் மீண்டும் பொதுத்தேர்தலில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் நகைச்சுவையான பரப்புரைகளை முன்னெடுப்பது முக்கியமல்ல.

மக்களுக்குச் சிறந்த சேவையாற்ற வேண்டும். நாட்டுக்கும் , ஊருக்கும் சேவையாற்றுபவர்களை நாடாளுமன்றத்துக்கு இந்தமுறை தெரிவு செய்யுங்கள். அதிகார முரண்பாடுகளால் கடந்த அரசாங்கம் செயற்பட்ட விதத்தை மக்கள் நன்கு அறிவார்கள்-என்றார். (ப)

## மகன் தாக்கி தாய் சாவு

கொழும்பு, ஜுன் 22

மகனின் தாக்குதலுக்கு இலக்கான தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் மஹியங்கனை தமன பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணியளவில் நடந்துள்ளது.

சம்பவத்தில் 62 வயதான பெண் பொல்லால் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார். சம்பவத்தில் காயமடைந்த மற்றொருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (க)

## பெருமரம் வீழ்ந்து பேருந்துகள் சேதம்

அக்கரைப்பற்றில் வீசிய பலத்த காற்றால் பெருமரம் ஒன்று சரிந்து வீழ்ந்ததில் 3 அரச பேருந்துகள் சேதடைந்துள்ளன. அக்கரைப்பற்று சாலையில் வீதியோரத்தில் இருந்த பெரும் மரமே சரிந்து வீழ்ந்துள்ளது.

பேருந்துகள் திருத்தும் கட்டடத்தின் ஒரு பகுதி முற்றாகச் சேதமடைந்துள்ளது. அங்கு நிறுத்தப்பட்டிருந்த 3 பேருந்துகள் பலத்த சேதமடைந்தன. (எ-ரி1)

# முகக்கவசம் அணியச் சொன்னவருக்கு 'அடி!'

## பொலிஸாரால் ஒருவர் கைது

கொழும்பு, ஜுன் 22

முகக் கவசம் அணியுமாறு கூறிய மருத்துவமனை ஊழியரைத் தாக்கியவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம் கராப்பிட்டிய போதனா மருத்துவமனையில் நடந்துள்ளது. தாக்குதலுக்கு இலக்கானவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். பூஸா, பிடிவெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு முகக் கவசம் அணியாமல், காயமடைந்த நபரொருவரை கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு அழைத்துவந்துள்ளார். அதன்போது, முகக் கவசம் அணியுமாறு வைத்தியசாலை ஊழியரொருவர் அந்த நபரை அறிவுறுத்தியிருந்த நிலையில், இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. அதையடுத்தே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.